
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய மாத இதழ்

மலர் - 15 நவம்பர் 2002 இதழ் - 11



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.

தமிழ்நாடு, இந்தியா

✆ 04257-30030, 30382. E-mail: kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

**தொடர்பு முகவரி**

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

## ஆசானின் அறிவுரையிலே...

1. ஆசிரியர் உரை 1
2. குறைத்தலும், கூட்டலும் 9
3. பெண்கள் பகுதி 11
4. சிறுவர் பகுதி 14
5. கருத்தரங்கத்தை பற்றி... 16
6. வாலிபர் பகுதி 18
7. அப்போஸ்தலர் ஒரு கண்ணோட்டம் 21
8. தவறுகளை ஒப்புக்கொள்ளும் போது 22
9. தேவபக்தியுள்ள வாழ்க்கைக்கு... 25
10. விசுவாசத்தின் அடிப்படைகள் 30

# THIRUMARAI AASAAN

PUBLISHED BY CHURCH OF CHRIST

Editor
S. Rajanayagam

Honorary Editor
J.C. Choate

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

*Pleading for the restoration of pure New Testament Christianity*

Vol.15 November - 2002 Issue-11


ஆசிரியர் உரை

## "நீங்கள் உணராதிருக்கிறது எப்படி?"

**கே**ள்வி கேட்பதும், கேள்வி கேட்கப்படுவதும் இப்பூமியின் வாழ்க்கையில் எல்லோருக்குமே சகஜமான ஒன்றுதான். சொல்லப்போனால் "கேள்வி" இல்லாமல், நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பொழுது கூட போகாது. கேள்வி என்பது பொதுவாக தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்வதற்காகக் கேட்கப்படும். இன்னும் சில நேரங்களில், தெரிந்திருக்க வேண்டிய ஒன்றைத் தெரிந்து கொள்ளாமலிருப் பதினிமித்தமாகவும் கேட்கப்படும். என்ன, எது, எத்தனை போன்ற கேள்வி வார்த்தைகள் முதல் வகைக்கும், ஏன், எப்படி போன்ற வார்த்தைகள் இரண்டாவதற்கும் பொருந்தக் கூடியவை. இந்த இரண்டாவது வகையில் வரும் "**எப்படி**" என்ற கேள்வி வார்த்தை, மற்ற எல்லாக் கேள்வி வார்த்தைகளைக் காட்டிலும் சற்று வேறுபாடுடையது. ஆம், அது பெரும்பாலும், ஆச்சரியத்துடன் கேட்பதற்காகப் பயன்படும் கேள்வி வார்த்தை.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது, இம்மாத நமது தலைப்பும் ஆச்சரியத்துடன் கேட்கப்பட்ட கேள்விதான் என்பது நமக்குச் சொல்லாமலே விளங்கும். அப்படியானால், அது யாரால் கேட்கப்பட்டது? எங்கே கேட்கப் பட்டது? ஏன் கேட்கப்பட்டது? என்ற கேள்விகள், கேள்விமேல் கேள்வியாக நமக்கு வரும். இக்கேள்விகளுக்கான பதிலைப் பெற்று கொள்வதற்கு, இதன் பின்னணியையும், பிறவற்றையும் கவனித்துப் படிப்பது அவசியம்.

புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ள, நான்கு நற்செய்தி நூல்களுள், குறைந்த அதிகாரங்களைக் கொண்டது மாற்கு எழுதின சுவிசேஷம். இதன் ஆசிரியரான மாற்கு, ஒரு அப்போஸ்தலன் அல்ல. பரிசுத்தவான்கள் பலரையும், குறிப்பாக அப்போஸ்தலர்களையும் அநேக சமயங்களில் இளைப்பாற்றும் அளவுக்கு பொருளாதார வசதி இவன் குடும்பத்திற்கு இருந்துள்ளது. தன் தாய் வீட்டில் அடிக்கடி வந்து தங்கின அப்போஸ் தலர்களின் தொடர்பால் குறிப்பாக, பேதுருவிடம் கொண்டிருந்த நெருக்கத் தால், இயேசுவைப் பற்றிய காரியங்களை இவன் அதிகமாக அறிந்து, திட்டமாக எழுதியிருக்கலாமென்று நம்பப்படுகிறது.

இவன் தனது நற்செய்தி நூலில் இயேசுவை "ஒரு வல்லமையுள்ள தேவ ஊழியக்காரராக" சித்தரிக்கிறான். இந்நூலின் சிறப்பு, "உடனே" என்பது. இவ்வார்த்தை, இந்நூலில் 42 முறை இடம் பெற்றுள்ளது. மாற்கு எழுதின நற்செய்தி நூலைப் படிக்காமல் சுவிசேஷத்தின் ஒட்டு மொத்த நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியாது என்று சொல்லுமளவுக்கு, இந்நூலில் காரியங்கள் அடங்கி இருக்கிறது.

சரி, இந்த மாற்கு எழுதின நற்செய்தி நூலில், இயேசுவால் கேட்கப்பட்ட சுமார் 63 கேள்விகள் இடம் பெற்றுள்ளது. அவைகளில், நம்முடைய தலைப்பு இடம் பெற்றுள்ள **எட்டாம் அதிகாரத்தில் மட்டும் 14 கேள்விகள்** கேட்கப்பட்டுள்ளது. சுவிசேஷப் புத்தகங்களில் இவ்வளவு கேள்விகள் எந்த அதிகாரத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை. இக்கேள்விகளை கவனித்துப் பார்த்தால், இக் கேள்விகளைக் கேட்ட இயேசுவானவர், அவைகளை ஒரு சுமுகச் சூழலிலோ அல்லது மகிழ்ச்சியான மனநிலையிலோ கேட்கவில்லையென்பது நன்றாகவே விளங்கும். ஆம், எட்டாம் அதிகாரம் 17-21 வசனங்கள் வரை உள்ள பகுதியை கவனித்துப் பார்த்தால், அக்கேள்விகள் வருத்தத்தோடும், சஞ்சலத்தோடும் ஒருவித சலிப்போடும், ஏமாற்றத் தோடும்தான் கேட்கப்பட்டுள்ளதென்பது பளிச்செனப் புரியும். இதோ, அக்கேள்விகள்.

*நீங்கள் யோசனை பண்ணுகிறதென்ன? (வச.17)*
*இன்னும் சிந்தியாமலும், உணராமலும் இருக்கிறீர்களா? (வ.17)*
*இன்னும் உங்கள் இருதயம் கடினமாயிருக்கிறதா?(வ.17)*
*உங்களுக்குக் கண்களிருந்தும் காணாதிருக்கிறீர்களா? (வ.18)*
*உங்களுக்கு காதுகளிருந்தும் கேளாதிருக்கிறீர்களா? (வ. 18)*
*நினைவுகூராமலிருக்கிறீர்களா? (வ. 18)*
*மீதியான துணிக்கைகளை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள்(வ.19, 20).*

இப்படி எல்லாம் கேட்டுவிட்டுத்தான், தன்னுடைய ஏமாற்றத்தின் உச்சகட்டமாக "**அப்படியானால், நீங்கள் உணராதிருக்கிறது எப்படி?**" என்று திகைத்துள்ளார்.

புரியாததும், விளங்காததும் குறைமதி கொண்ட மனிதர்கள் சம்பந்தபட்டது. ஆம், நம்முடைய அறிவு குறைவுள்ளதாக இருக்கிற படியால், எல்லாவற்றையும் புரிந்து கொள்ளவும், விளங்கிக் கொள்ளவும் நம்மால் முடியாது. அப்படி முடியாததில், நாம் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால், நிறைந்த தேவ ஞானம் கொண்ட இயேசுவுக்கே, இவர்களின் எண்ண ஓட்டமும், செயல்பாடும் புதிராக இருந்திருக்கிறதென்றால். அவர்கள் எப்படிப்பட்ட தன்மையுடையவர்களாக இருந்திருக்க வேண்டுமென எண்ணிப்பாருங்கள்!

நம்முடைய இயேசுவானவர், அவருடைய சீடர்கள் விளங்கிக் கொள்வதற்கும், உணர்ந்து கொள்வதற்கும் எந்தவொரு வாய்ப்பும் தராமலேயே, "நீங்கள் உணராதிருக்கிறது எப்படி?" என்று கேட்கவில்லை. முதலில் அவர்களின் கேட்டறியும் திராணிக்குத்தக்கதாகப் பேசியுள்ளார் (மாற். 4:33). அடுத்து, விளங்காதவற்றை தனித்திருக்கும்போது விவரித்தும் சொல்லியுள்ளார் (4:34) அத்தோடு அவர்கள் உணர்ந்து கொள்ளும் படியான வாய்ப்பை, மறுக்க முடியாத அளவில் நிரூபித்துக் காட்டி, அதன் பிறகே அப்படிக் கேட்டுள்ளார். ஆம், இன்றளவும் பேசப்படும் இரண்டு அற்புதங்களை அவர் அவர்களுடைய

கண்களுக்கு முன்பாக நடப்பித்து, அதில் அவர்களையும் சம்பந்தப்படவைத்து, அதன் மூலம் தம்முடைய வல்லமை பற்றிய தெளிவை ஏற்படுத்தி அதன் பிறகே, இப்படிக் கேட்டுள்ளார்.

ஆகவேதான், இக்கேள்வியைக் கேட்கும் முன்பாக, இயேசுவானவர், நான் ஐந்து அப்பங்களை 5,000ம் பேருக்கு பங்கிட்டபோது, மீதியான துணிக்கைகளை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள் என்று கேட்டார். அதற்கு, பன்னிரண்டு என்றார்கள். நான் ஏழு அப்பங்களை 4,000 பேருக்கு பங்கிட்டபோது, மீதியான துணிக்கைகளை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள் என்று கேட்டார். அதற்கு ஏழு என்றார்கள். (8;19, 20) அடுத்து தான், இதெல்லாம் தெரிந்து தானே இருக்கிறது அப்படியானால், "நீங்கள் உணராதிருக்கிறது எப்படி" என்றார்.

இப்பொழுது, இது எந்த சந்தர்ப்பத்தில் நடந்தது என்பதையும் கொஞ்சம் கவனியுங்கள். ஒரு சமயம், இயேசுவும், அவருடைய சீடர்களும் படகில் ஏறி பயணம் செய்கின்றனர். அப்பொழுது, தங்களது ஆகாரத்திற்கான அப்பங்களைக் கொண்டுவர மறந்து, "ஒரு அப்பத்தை" மாத்திரம் கையில் வைத்திருந்தனர். **அப்பொழுது அவர்களுடைய எண்ணங்கள், அவர்கள் கொண்டு வர மறந்த அப்பத்திலும், அவர்களுடைய பேச்சுகள் அடுத்து என்ன செய்வதென்பது குறித்தும் இருந்தது.** சீடர்களின் எண்ணமும், பேச்சும் அப்பத்தைச் சுற்றி இருந்தபடியால், அந்த **"அப்பத்தை"** மையமாக வைத்து, ஒரு ஆவிக்குரிய பாடத்தைக் கற்றுக் கொடுக்க விரும்பி, "பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்தும், ஏரோதின் புளித்தமாவைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்" என்றார். (மாற்கு. 8;15)

இங்கே, இயேசுவானவர் என்ன சொல்ல வருகிறார் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. தங்கள் மனம் போன போக்கில் சிந்திக்கத் தொடங்கினார்கள். நாம் அப்பங்களைக் கொண்டு வர மறந்ததற்காகச் சூடு போடுகிறார் என்று எண்ணினர். ஒருவேளை அவர்கள் இப்படியும் எண்ணியிருக்க வாய்ப்பு உண்டு, பரிசேயரும், பரிசேயருடைய சீடரும் புறஜாதிகள் மற்றும் சமாரியர்களிடம் அப்பங்கள் போன்ற உணவுப் பொருட்களை வாங்கமாட்டார்கள். ஆனால், நமக்கு ஒருவேளை பரிசேயரிடமிருந்து வாங்கும் திட்டம் இருக்கிறதென்று எண்ணி இப்படி சாடையாகச் சொல்லுகிறாரோ என்றும் எண்ணி யிருக்கலாம். உண்மையில், இயேசுவானவர் இப்படிப்பட்ட பொருளில் எதுவும் சொல்லவில்லை. ஆவியின் சிந்தை கொண்ட இயேசுவானவர், மனிதர்களாகிய நம்மைப்போல, காரியங்களை மாம்ச சிந்தையோடு பார்ப்பதுமில்லை, அப்படி அணுகுவதுமில்லை.

புளித்தமாவாகிய பரிசேயர், ஏரோது ஆகியோரைக் குறித்து அவர் சொல்ல வந்த கருத்து இதுதான். தங்களின் பொய்ப் பக்தியாலும், தேவையில்லாத ஆசாரங்களினாலும் ஆன்மீக ரீதியாக ஜனங்களை மோசம் போக்கும் பரிசேயர்களைக் குறித்தும், ஜனங்களை நீதிக்கும், பரிசுத்தத்திற்கும் வழி நடத்துவதற்கு அரசியல் ரீதியாகத் தடையேற்படுத்தும் ஏரோதைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் என்றுதான் சொல்லவந்தார். ஆனால், இயேசுவின் சீடர்களுக்கு அது விளங்கவில்லை. சீடர்களின் புரிந்து கொள்ளாமை, இயேசுவுக்கு எவ்வளவு கவலையை ஏற்படுத்தினதென்பதை, **"நீங்கள் உணராதிருக்கிறது எப்படி?"** என்ற அவரின் கேள்வி நமக்கு வெகுவாக எடுத்துக் காட்டுகிறது.

தன்னுடைய சீடர்களின் மந்த நிலையைக் கண்டு கலங்கிப் போன இயேசுவானவர், எங்கே தன் ஊழியமே வீணாகிப்போகுமோ என்று எண்ணி, "சீஷத்துவத்தை" குறித்து சீடர்களிடம் அடுத்து பேசினார். (8;34, 35) அதையும் அவர்கள் சரியாகப் புரிந்து கொண்ட மாதிரி தெரியவில்லை. ஆகவே, மீண்டும் 9-ம் அதிகாரத்தில் மறுரூபமலைக் காட்சி அவர்களுக்கு காட்டப்படுகிறது. அப்போதும், ஆவியின் சிந்தையற்ற சீடர்கள் "மூன்று கூடாரம்" பற்றி பேசுகிறார்கள். பிறகு, மரித்தோரின் உயிர்த்தெழுதல் பற்றிய போதனை. அதுவும், உள்ளே செல்லவில்லை. (9;10). அப்பொழுதுதான் சோர்ந்து போன இயேசு 8;19-ல் **"விசுவாசமில்லாத சந்ததியே"** என்று கடிந்து கொள்கிறார்.

இதற்குப் பிறகு பேதுரு, 10:28-ல் "இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே என்று சொல்லத் தொடங்கினான்". இதையே, மத்தேயு ஆசிரியர், "இதோ நாங்கள், எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே, **எங்களுக்கு என்ன கிடைக்கும்?** என்று கேட்டதாக எழுதியுள்ளார். (மத். 19;27). இவை எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக மத். 26;56-ல் "அப்பொழுது, சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்" என்று உள்ளது. இவைகளை நாம் கவனித்துப் பார்க்கும்போது, தன்னால் தெரிந்து கொள்ளப்பட்டு, தன்னால் போதிக்கப்பட்ட சீடர்களால், இயேசுவை கடைசி வரை, அதாவது, சிலுவை வரை புரிந்து கொள்ளவே முடியவில்லை. இயேசுவானவரின் காரியங்களை உணராதவர்களாகவே வாழ்ந்துள்ளார்கள் என்பது எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் தெளிவாகிறது.

சரி, இப்படி இவர்கள் உணராமல் போனதற்கு என்னதான் காரணம் என்று நாம் நமது மண்டையைப் பிய்த்துக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், நமதாண்டவர் அதே பகுதியில், அதற்குப் பதிலும் கொடுத்துவிட்டார். முதலாவது காரணம், **இருதயக் கடினம்**; (மாற்கு. 8;17 6;52). இரண்டாவது காரணம், **அற்ப விசுவாசம்** (மத். 16;8) இவ்விரண்டும் ஒருவன், இயேசுவின் சீடனாக இருப்பதற்கும், தேவனுடைய பிள்ளையாக வாழ்வதற்கும் பெருந்தடையை ஏற்படுத்தக் கூடியவை. இவ்விரண்டையும், வேத வசனங்கள் கடுமையாகச் சாடுகின்றன. இவை பற்றி கொஞ்சம் சுருக்கமாகப் பார்ப்போம்.

**I. தன்னுடைய சீடர்கள் உணர்ந்து கொள்ளாமல் போனதற்கு, இயேசுவானவரே சொல்லும் முதல் காரணம் "இருதயக் கடினம்".**

இருதயக் கடினம் தேவனுக்கு விரோதமான பகை. இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திர யாத்திரையில் 40 ஆண்டுகள் அலைக்கழிக்கப்பட்டதற்கும், நியாயாதிபதிகளின் காலத்தில், ஜனங்கள் திரும்பத் திரும்ப எதிரிகளின் கையில் ஒப்புக் கொடுக்கப்பட்டதற்கும் அடிப்படைக் காரணம், "இருதயக் கடினம் தான்".

இருதயக் கடினம் நாம் கர்த்தரிடம் திரும்புவதைத் தடை செய்யும் (II.கொரி. 6;13) என்று பவுலடியாரும், இருதய கடினம், நாம் கர்த்தருடைய வழிகளை விட்டுத் தப்பிப் போகப் பண்ணும் என்று ஏசாயா தீர்க்கனும் உரைக்கிறார்கள். (63;17). இருதயக் கடினம், நாம் தள்ளுண்டு போகும்படி செய்யும் என்று தானியேல் தீர்க்கன் எடுத்துக் கூறுகிறார். (5; 20) இன்னும், பக்தன் யோபு, இருதயக் கடினம் "நம்மை வாழ வைக்காது" என்று எச்சரிக்கிறான். (யோபு 9.4) சிறப்புக்குரிய இந்த நான்கு வேத மனிதர்களும் இங்கே என்ன சொல்லுகிறார்கள்? இருதயக் கடினம், நம்மை

தேவனிடத்தில் இருந்து பிரித்து இம்மை, மறுமை ஆகிய இரண்டையும் அழித்துப் போடும் என்று தானே சொல்லுகிறார்கள், அப்படித்தானே. அப்படியானால் தேவனுடைய பிள்ளையாக வாழ விரும்பும் நாம் இருதயக் கடினம் உள்ளவர்களாக இருக்கலாமா?

ஏதோ, தேவனுக்கும், பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு அவர் பகிர்ந்தளித்த வேத வசனங்களுக்கும் சம்மந்தமில்லாதவர்கள் தான், இருதயக் கடினத்தோடிருப்பவர்களென்றும், நான் அப்படிப்பட்டவனல்ல என்றும் எண்ணி, இங்கே நாம் நம்மை ஏமாற்றிக் கொள்ளவேண்டாம். நான் இப்படிச் சொல்லுவதைக் குறித்து நீங்கள் ஆதங்கப்படவும் வேண்டாம். நான் சொல்ல வருவதற்கு வசன ஆதாரம் உண்டு.

ஒருசமயம் இயேசுவானவர், தன்னுடைய ஊழிய நாட்களில் திமிர்வாதக்காரனை நோக்கி; மகனே; **உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது** என்று சொன்னதை அங்கே இருந்த **வேதபாரகர்களால்** புரிந்து உணர்ந்து கொள்ள முடியவில்லை. அப்படியானால், யார் இந்த வேதபாரகர்? மோசேயின் பிரமாணங்களடங்கிய பழைய பிரமாணத்தில் தேறினவர்களாயிருந்து, அவைகளை பிழையில்லாமல் பிரதி எடுக்கும் வேலையைச் செய்து வந்தவர்கள். அச்சுக் கூடங்களில்லாத அந்த நாட்களில், இவர்கள் கொடுக்கும் பிரதிகள் தான் அதிகாரப்பூர்வமாக விநியோகம் செய்யப்படும். அதாவது இவர்கள் தொழில், வேத வசனங்களை அன்றாடம் பார்க்கும், படிக்கும், விவாதிக்கும், எழுதும் ஒன்று. ஆனாலும், அந்த மோசேயின் பிரமாணங்களும், தீர்க்க தரிசனங்களும் இயேசுவைக் குறித்து என்ன சொல்லுகிறதென்பதை இவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

அடுத்து, **ஜெப ஆலயத் தலைவனுடைய வீட்டாரால்,** இயேசுவின் வல்லமையை உணர முடியவில்லை (மாற்கு. 5;35) பக்தியுள்ள யூதர்கள் கூடி தேவனை தொழும்படியாக ஏற்படுத்தப்பட்டதுதான் ஜெப ஆலயம். பக்தியுள்ளவர்கள், அதாவது, வேதத்தை, வாசிக்கவும், அதை கேட்கவும், விருப்பமுள்ளவர்கள் தான் அங்கு வருவார்கள். அவர்களில் சிறந்தவனாக இருப்பவனே ஜெப ஆலயத் தலைவனாக ஏற்படுத்தப்படுவான். இந்த அடிப்படையில் அவனுடைய குடும்பமும் வேதத்தில் தேறின குடும்பமாக இருந்திருக்க வேண்டும். ஆனாலும், அவர்களுக்கு இயேசுவின் வல்லமை விளங்கவில்லை. அதற்கடுத்து, **பரிசேயர்.** இவர்களுக்கும் இயேசுவின் காரியங்களை உணர்ந்து கொள்ள முடியவில்லை (மாற்கு 8;11) யார் இந்த பரிசேயர்? யூத மதப் பிரிவுகளில் பிரதானமானவர்களாயிருந்து மோசேயின் பிரமாணங்களை அட்சரம் பிசகாமல் கடைப்பிடிக்கிறோம் என்று பீற்றித் திரிந்தவர்கள். ஆனாலும், இவர்களுக்கும் இயேசுவின் காரியங்கள் விளங்கினபாடில்லை.

மேற்கண்ட காரியங்கள் நமக்குச் சொல்லும் பாடம் என்ன? வேதத்தைக் கையிலே வைத்திருப்பதும், அதை வாசிப்பதும், எழுதுவதும், பேசுவதும், அதிலே தேறினவர்களாக இருப்பதும், **தேவதிட்டத்தை உணர்ந்து கொள்ளுவதற்குப் போதுமானதல்ல.** அதாவது வசனங்களின் போதனை என்ன, அதன் உள்ளான கருத்து என்ன என்பதைப் பற்றி அக்கறையில்லாமல், வசனங்களுக்குத் தங்களை கீழ்ப்படுத்தாமல் வெறுமனே அதோடு சம்பந்தமுள்ளவர்கள் போல் மாத்திரம் காட்டிக் கொண்டு பக்திமான்கள் போல் சமுதாயத்தில் வலம் வருவது இருதயக் கடினத்தின் பிரதிபலிப்பே.

இங்கே இரண்டே இரண்டு பேரை உங்கள் முன்னே நிறுத்த விரும்புகிறேன். இவர்கள் இருவரும் நமது மாற்குவில் தான் உள்ளார்கள். **ஒருவன் அசுத்த ஆவியுள்ள மனிதன்** (1:23). **இன்னொருவன் குஷ்டரோகி** (1:40). இவர்கள் இருவரும் இயேசுவுடன் சுற்றித் திரியும் வாய்ப்பையோ அல்லது அவருடைய உபதேசங்களைக் கூட இருந்து கேட்கும் சிலாக்கியத்தையோ அல்லது அவருடைய வல்லமையை கண்ணாரக் காணும் பாக்கியத்தையோ பெறாதவர்கள். ஆயினும், இயேசுவைப் பற்றி தாங்கள் அறிந்து கொள்ளும் படியாகக் கிடைத்த சொற்ப சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி, அதன் மூலம் தங்கள் இருதயத்தை இளக்கமாக்கி, அவருடைய தெய்வீகத்தையும், வல்லமையையும் உணர்ந்து கொண்டனர். ஆகவே தான், அசுத்த ஆவியுள்ள மனுஷனால், "நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்" என்று சத்தமிட முடிந்தது (மாற் 1:24). அடுத்து, ஊருக்கு புறம்பேயிருந்த குஷ்டரோகியால் "அவர் முன்பாக, முழங்கால் படியிட்டு, உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் (1:40)." என்று வேண்டிக் கொள்ளவும் முடிந்தது.

இயேசுவையும், அவருடைய தெய்வீகத்தையும், அவர் பூமிக்கு வந்த நோக்கத்தையும் உணர்ந்து அங்கீகரிக்க வேண்டியவர்கள், உணர்ந்து கொள்ள மறுத்தபோது, இவர்களெங்கே உணரப் போகிறார்கள் என்று அற்பமாய் நினைக்கப்பட்டவர்கள் உணர்ந்து பலமாய் அறிக்கையிட்டார்கள். "ஞானிகளுக்கு மமறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தினேன்" (லூக்.10:21) என்று எழுதியிருப்பது எவ்வளவு உண்மையானது! ஆம், இன்றளவும் இது உண்மையானதாகவும், யதார்த்தமானதாகவும் இருக்கிறது. போலியான பக்தியும், பகட்டான ஆன்மீக வாழ்க்கையும் மாத்திரம் தேவனை உணர்ந்து அங்கீகரிப்பதற்கு போதுமானதாகாது. இருதயத்தை இளக்கமாக்கி, தேவனுடைய சமூகத்தில் நான் ஒன்றும் இல்லை என்பதை தயக்கமில்லாமல் ஒப்புக்கொண்டு, "கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்" என்று சாமுவேல் பிள்ளையாண்டான் சொன்னது போல், நாம் நடந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான் தேவனுடைய மகத்தான இரட்சிப்பின் திட்டத்தையும், இயேசுவானவர் தம்முடைய சொந்த இரத்தம் சிந்தி சம்பாதித்த சபையையும் (அப். 20:28) நாம் அறிந்து அதற்கு ஒப்புக்கொடுக்க முடியும்.

**II. தன்னுடைய சீடர்கள் உணர்ந்து கொள்ளாமற் போனதற்கு, இயேசுவானவர் தரும் இரண்டாவது காரணம் "அற்ப விசுவாசம்".**

கிறிஸ்தவம் உன்னதமான தேவனுடைய மார்க்கம். இம்மார்க்கத்திற்கு அடிப்படை விசுவாசம். எபிரேய ஆசிரியர், "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" என்று கூறுகிறான். (எபி 11:6). அப்போஸ்தலன் பவுல், "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்" என்று கூறுகிறார். (2. கொரி. 5:6). தேவனையும், அவருடைய பிரமாணங்களையும், அவரை நம்பும் பிள்ளைகள், அப்படியே ஏற்று நடப்பது தனக்குப் பிரியமானது, அதற்குத் தன்னுடைய அங்கீகாரம் உண்டு என்பதை வெளிப்படுத்தவே, விசுவாசிகளின் பட்டியலை, பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு தேவன் வெளிப்படுத்தியுள்ளார் (எபி.11அதி). தன் மீதும், தன் வார்த்தையின் மீதும் ஒருவன் விசுவாசமாயிருக்க வேண்டுவது அத்தியாவசியம் என்பதை எடுத்துக் காட்ட தேவன் இதற்குமேல் என்னதான் செய்யவேண்டும்?

ஆனாலும், அவரைப் பின்பற்றுகிறோம் என்பவர்களிடத்தில் தேவையான அளவுக்கு விசுவாசம் இருப்பதில்லை. ஆன்மீக காரியங்களுக்காக, தங்களுடைய பெற்றோர்கள் மீதும், தாங்கள் சார்ந்திருக்கும் சபைப் பிரிவு போதகர்கள் மீதும், மார்க்க முன்னோடிகள் மீதும், மதத் தலைவர்கள் மீதும் வைக்கும் நம்பிக்கையைக் கூட, அநேகர், சர்வ வல்ல தேவன் மீதும், அவருடைய நியாயந்தீர்க்கும் வார்த்தைகள் மீதும் வைப்பதில்லை. இன்றைக்கு, கிறிஸ்தவ உலகத்திலே மலிந்து கிடக்கும் உபதேசக் குழப்பங்களுக்கும், பிரிவினைகளுக்கும், அடிப்படை விசுவாசக் குறைவுதான். இது கேட்டுக்குத்தான் வழிநடத்தும்.

இயேசுவின் சீடர்கள் அற்ப விசுவாசம் கொண்டவர்களாக இருந்தபோது இயேசுவானவர் அதைக் கடிந்து கொண்டார். ஆம், இயேசுவின் சொல்லைக் கேட்டு நீரின் மீது நடந்த பேதுரு, காற்றின் வேகத்தைக் கண்டு பயந்து, "ஆண்டவரே, என்னை இரட்சியும் என்று கூப்பிட்டான்". உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து, **அற்ப விசுவாசியே ஏன் சந்தேகப் பட்டாய்** என்றார். (மத். 14:31). இங்கே அற்ப விசுவாசத்தின் விளைவு **"சந்தேகம்"**.

ஒருசமயம் இயேசுவோடு படகில் ஏறி பயணித்தனர் சீடர்கள். இயேசு நித்திரையாயிருந்தார். படகு அலைகளினால் மூடத்தக்கதாய் பெருங்காற்று உண்டாயிற்று. அவரை எழுப்பி, எங்களை இரட்சியும், மடிந்து போகிறோம் என்றனர். அதற்கு அவர், **அற்ப விசுவாசிகளே ஏன் பயப்படுகிறீர்கள் என்றார்.** (மத் 8;23-26) இங்கே, அற்பவிசுவாசத்தின் விளைவு **"பயம்"**. இன்னும் புகழ்பெற்ற பிரசங்கமாகிய மலைப்பிரசங்கத்தில், இயேசு, **அற்பவிசுவாசிகளே ...என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம் என்று கவலைப் படாதிருங்கள்"** என்றார் (மத். 6;30, 31). இப்பகுதியில், அற்ப விசுவாசம் பெற்றுத் தருவது **"கவலை"**. "சந்தேகம்" "பயம்" "கவலை" ஆகிய மூன்றும் சீடர்களிடம் இருந்தது. இயேசுவின் சீடனாக விரும்புகிறவனுக்கு எது இருக்கக் கூடாதோ அது அவர்களிடம் அப்பொழுது இருந்தது. இயேசுவானவர் அவர்களைக் கடிந்து கொண்டார்.

அவிசுவாசத்தை ஏற்படுத்தும் இக்குணங்கள் இன்றைக்கு நம்மிடம் இருக்கிறதா என்று நம்மை சோதித்துப் பார்ப்போம். தேவனுடைய பிள்ளைகளாகவும், இயேசுவின் சீடனாகவும் வாழ விரும்பும் நமக்குள் இம்மூன்றும் இருக்குமானால், அல்லது இம்மூன்றில் ஏதாவது ஒன்று இருக்குமானால் கூட, நாம் அதற்குத் தகுதியானவர்கள் அல்ல. தேவனையும், அவருடைய வார்த்தைகளையும், இயேசுவையும் அவருடைய உபதேசங்களையும் ஏற்றுக் கொள்ளாதவர்களாக நம்மை இவை மாற்றிப்போடும். ஆகவே, அற்ப விசுவாசத்தை ஆரத் தழுவி வரவேற்கும் இச்சின்ன குணங்களை அறவே ஒழிப்போம்.

சரி, இப்பொழுது மிகவும் கவனமாகக் கவனியுங்கள். இருதயக் கடினத்திற்காகவும், அற்ப விசுவாசத்திற்காகவும், உணராத் தன்மைக்காகவும் இயேசுவால் கடிந்து கொள்ளப்பட்ட சீடர்கள், பின்னாளில் அதே இயேசுவுக்காக வைராக்கிய வாஞ்சையாக ஊழியம் செய்து, தங்களது உயிரையும் துச்சமென மதித்து, கிறிஸ்துவின் உபதேசத்திற்காக, கொடுமையான மரணங்களையும் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்களாய் வாழ்ந்துள்ளார்களே, அது எப்படி? கடின இருதயமும் அற்ப விசுவாசமும் உடையவர்களாயிருந்து இயேசுவானவரையே தடுமாற வைத்தவர்கள், பின்னாளில் தங்களது அர்ப்பணிப்பு வாழ்க்கையின்

மூலமாக அநேகரை இரட்சிப்புக்குள் வழிநடத்தி நம்மையெல்லாம் ஆச்சரியத்தில் மூழ்கடிக்கின்றனரே அது எப்படி? இம்மாபெரும் மாற்றத்திற்குக் காரணம் தான் என்ன? எந்த சந்தேகமுமில்லாமல், இயேசுவின் உயிர்த்தெழுதலும், பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பெற்றுக் கொண்ட ஆவியின் அநுக்கிரகமும் தான். ஆம் இயேசுவானவர் மரித்தோரிலிருந்து எழுந்து, தேவனுடைய குமாரனென்று பலமாய் நிரூபிக்கப்பட்டு, பெந்தெகொஸ்தே நாளின் திருமுழுக்குக்குப் பிறகு, அவர்களின் ஒட்டுமொத்த பார்வையில் அதிசயிக்கத்தக்க மாற்றம் நிகழ்ந்தது.

நன்றாக தெரிந்து கொள்ளுங்கள், ஒரு காலத்தில் உணராதிருந்த சீடர்கள் இப்பொழுது முழுமையாக உணர்ந்து கொண்டார்கள். அவர்களுடைய சந்தேகம், பயம், கவலை ஆகிய அனைத்தும் மாயமாய் மறைந்து போயிற்று. ஆம், இயேசுவின் ஊழிய நாட்களில் உணராதவர்கள், உயிர்த்தெழுந்ததற்குப் பின் முற்றும் உணர்ந்து கொண்டார்கள், அப்படியானால் இன்றைக்கு இயேசுவின் சீடர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிற நாம், எப்படிப்பட்டவர்களாய் வாழ்ந்து கொண்டுள்ளோம்?

உணர வேண்டியவர்கள், உணர வேண்டியதை, உணர வேண்டிய சமயத்தில் உணர்ந்து கொள்ளவேண்டும். இயேசு, தம்முடைய சீடர்களிடம் அதைத்தான் எதிர்பார்த்தார். உணராதபோது, ஏமாற்றமடைந்தார். இயேசுவானவர், நீங்கள் உணராதிருக்கிறது எப்படி என்ற கேள்வியைக் கேட்டபோது அவர்களுடைய நிலையை எண்ணிப் பாருங்கள்.

1. இயேசுவைப் பற்றிய அனைத்து தீர்க்கதரிசனங்களும் அப்பொழுது முழுமையாக நிறைவேறவில்லை. 2. இயேசுவின் உயிர்த்தெழுதல் மறுக்க முடியாத அளவில் நடைபெற்றிருக்கவில்லை. 3. பரிசுத்த ஆவியானவர் பெலத்தோடே வந்திருக்கவில்லை. 4. கிறிஸ்துவின் சபை வாக்களித்தபடி ஸ்தாபிக்கப் பட்டிருக்கவில்லை. 5. தேவனுடைய வார்த்தைகள் முறையாகக் கொடுக்கப் படவில்லை. 6. இரட்சிப்பின் திட்டமும் வெளியாகவில்லை. அந்த நிலையிலேயே நீங்கள் உணராதிருக்கிறது எப்படி? என்று இயேசு அவர்களைப் பார்த்துக் கேட்டு கவலையும், ஏமாற்றமும் அடைந்துள்ளார்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, இயேசுவானவர் அந்தக் கேள்வியைக் கேட்டபொழுது சீடர்களுக்கு இருந்த நிலையோடு, நம்முடைய நிலையை ஒப்பிட்டுப் பாருங்கள். அங்கே, "இல்லை" என்பதெல்லாம் இங்கே "ஆம்" என்று இருக்கிறது. அப்படியானால், நாம் இன்றைக்கு, ஆவிக்குரிய வாழ்வில், தேவ நாமத்துக்கடுத்த காரியத்தில் உணர்வற்றவர்களாக, எந்த ஒரு உபதேசமும் நம்முடைய இருதயத்தைத் தொட அனுமதிக்காதவர்களாக, வாழ்ந்து கொண்டிருப்போமானால், நம்மைப் பார்த்து அவர் எப்படிப்பட்ட கேள்வியைக் கேட்பார் என்று சற்று எண்ணிப் பாருங்கள்.

ஒருவேளை, நாம் இன்னும் உணராதவர்களாயிருந்தால், இப்பொழுதாகிலும் உணர்வடைந்து, வேத வசனங்களின் உள்ளான போதனைகளை ஏற்று, கிறிஸ்துவின் உபதேசத்தில் தெளிவடைந்து, பரலோக பாக்கியத்துக்கான வாய்ப்பை பெருக்கிக் கொள்வோமாக! ஆமென்.

**S. ராஜநாயகம்.**

# குறைத்தலும், கூட்டலும்

கிறிஸ்தவ வாழ்வு என்பது குறைத்தலும், கூட்டலும் நிறைந்த வளர்ச்சியின் வாழ்க்கை. கிறிஸ்தவ ஜீவியத்தில் ஒருவன் தன் நடத்தையிலிருந்து தவறுதலான காரியங்களை விலக்கிவிட வேண்டும். இதைத்தான் நாம் மனந்திரும்புதல் என்கிறோம். நம்மை இரட்சிக்கப்படுவதிலிருந்தும், கிறிஸ்துவைப் போல வாழும் மேலான வாழ்க்கையிலிருந்தும் விலகச் செய்யும் பாவத்திலிருந்து நாம் திரும்ப வேண்டும் அல்லது மனந்திரும்ப வேண்டும்.

நாம் நீக்க வேண்டிய பாவம் அல்லது தவறான காரியங்கள் எவையென்றால், பெருமை, பொறாமை, பகை, புறங்கூறுதல், திருட்டு, பொய் பேசுதல், ஒழுக்கக்கேடு. நாம் செய்யும் நன்மையே நாம் இரட்சிக்கப்பட போதுமானது என்ற நினைப்பு, மற்றும் நம்மை கிறிஸ்தவனாக வாழவிடாத எந்த ஒரு காரியமுமே இப்பட்டியலில்தான் சேரும். இயேசு நாம் மனந்திரும்பாமல் போனால் கெட்டு போவோம் என்றார் (லூக். 13;3). பவுல் கூறும்போது, "அறியாமையுள்ள காலங்களில் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்" (அப். 17;30). ஒருவன் தன் பழைய வாழ்க்கையின் பாவத்திலிருந்து மனந்திரும்பாமல் இருந்துகொண்டு நான் ஒரு கிறிஸ்தவன் என்று எப்படி தன்னை சொல்லிக் கொள்ள முடியும்? கிறிஸ்தவன் மனந் திரும்பியிருக்கிறான் என்பதுதான் அவனை இவ்வுலகத்தில் இருக்கும் மற்றவர்களோடு பிரித்து காட்டுகிறது.

ஆனால் மனந்திரும்புவது மட்டுமே போதுமானது அல்ல. பாவமன்னிப்பும் அவசியமாக இருக்கிறது. ஆனால் தேவனோடு ஒருவனின் தனிப்பட்ட உறவை பொருத்தே அவன் பாவ மன்னிப்பை பெறமுடியும். தேவனிடத்திலும், இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் வைத்து, அந்த விசுவாசத்தால் பாவத்திலிருந்து மனந்திரும்பி, இயேசுவை தேவ குமாரன் என்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்குப் பெற்றவர்கள்தான் பாவமன்னிப்பைப் பெற முடியும். இவைகளைச் செய்தவர்கள் பற்றி நாம் அப். 2ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அப்போஸ்தலர்களால் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதைக் கேட்டு, தங்கள் பயங்கர பாவத்திலிருந்து விடுதலை பெற என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு பேதுரு, "அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி,

ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்று கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப் 2.38) என்று சொன்னான்.

இன்னும் நாம் அப்போஸ்தலர் புத்தகத்தை தொடர்ந்து வாசிக்கையில், இயேசு தேவனுடைய குமாரன் என்று நிச்சயமாக நம்பிய பவுலைக்குறித்து வாசிக்கிறோம். விசுவாசியான பின்பு, அவன் பாவங்கள் போக கழுவப்படும்படியாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி சொல்லப் பட்டான் (அப். 22:16). இந்த கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதன் மூலம்தான் பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமிலிருந்த ஜனங்களும் சவுலும், திருமுழுக்குப் பெற்று தங்கள் பாவத்தைக் கழுவி, மறுபடியும் பிறந்தார்கள், கிறிஸ்துவுக்கு புதுசிருஷ்டியாக மாறினார்கள். ஆகவே அவர்கள் கிறிஸ்தவ ஜீவியத்தை ஆரம்பிக்க ஆயத்தமாக இருந்தார்கள் (யோவான் 3:3-5; ரோமர். 6:3,4; II கொரி. 5:17; I. பேதுரு. 2:3).

இப்படி ஒருவன் மறுபடியும் பிறந்து, இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்தவனாக மாறும்போது தன் வாழ்க்கையில் சிலவற்றை கூட்ட வேண்டும்! திருவசனமாகிய களங்மில்லாத ஞானப் பாலின் மேல் வாஞ்சையாக இருந்து, ஆண்டவருடைய எளிதான போதனைகளை படிப்பதின் மூலம் விசுவாசத்தில் வளரவேண்டும். விசுவாசத்தோடு கூட்ட வேண்டிய சில காரியங்கள்; தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம், அன்பு. போன்றவைகள் நம்மை, மரண பரியந்தம் கிறிஸ்துவுக்கு உண்மையாக இருக்க வேண்டியதற்கு தேவையான மற்ற காரியங்களுக்கு வழிநடத்தும்.

பேதுரு சொல்லும்போது, "இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறக் கழுவி தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப் போன குருடனாயிருக்கிறான்". (2 பேதுரு 1:9). வேறு வார்த்தைகளில் சொன்னால் நாம் அறிவிலும், திறமையிலும், கர்த்தருக்கு கனி தருவதிலும் வளராவிட்டால் அவனால் கிறிஸ்தவ ஜீவியம் செய்யமுடியாது.

அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லுகையில் இந்த கிறிஸ்தவ குணங்களை நாம் கூட்டி வழங்கினால், நாம் கனியற்றவர்களாகவோ, வீணராகவோ இருக்க ஒட்டாது என்கிறார். ஆகையால், "சகோதரரே, உங்கள் அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2 பேதுரு 1:10,11) என்கிறார். அவருடைய ஆலோசனையை கேட்டு அதன்படி நடப்போம்.

**J.C. Choate**

**J.C. சோட்.**

# "ஆவிக்குரியவர்களாயிருங்கள் என்று பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுத்தல்"

தலைமுறைகள் பல கடந்தும், கிராமப்புறங்களில் வசிக்கும் பலமக்கள் தங்கள் கைகளால் வேலை செய்தே தங்கள் பிழைப்பை நடத்துகின்றனர். சரீர வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள சூரிய உதயம் முதல் மறைவு மட்டும் வேலை செய்கிறார்கள். இன்றைக்கும், உலகின் பல இடங்களிலே, தங்கள் வாழ்க்கையின் பெரும்பாலான நேரங்களை, உண்ணவும், உடுக்கவும், இருப்பிடத்திற்காகவுமே செலவு செய்து கொண்டிருக்கின்றனர்.

காரியங்கள் இவ்வாறு இருந்தபோதிலும் ஒவ்வொரு சரீரத்திற்குள்ளேயும், அழியாத தன்மையை உடைய அமைதியான ஆவி ஒன்று உள்ளது. அதுதான் உண்மையான மனிதன். வாழ்க்கை முழுவதும் இந்த ஆவியானது கேட்பாரற்று, ஆவிக்குரிய போஷாக்கு இல்லாமல் அழுது, ஒரு அதிருப்தியான நிலையை உருவாக்கி, நிறைவின்றி எப்போதும் இந்த சரீரத்தையே முக்கியமாக நினைத்துக் கொண்டிருக்கிற மனிதனுக்குள் முடங்கிக் கிடக்கிறது.

பெற்றோர்கள் நல்ல பெற்றோர்களாக இருக்க வேண்டுமானால் தங்கள் கையில் தவழும் அன்புச் செல்வங்களின் சரீரத் தேவைகளை மட்டும் சிந்திக்காமல் அதற்குள் இருக்கிற ஆன்மாவையும் நினைக்க வேண்டும். அப்படியானால், பிள்ளைகள் பசிக்காக அழும்போது ஆகாரத்தோடு மட்டுமின்றி ஆவிக்கேற்ற உணவையும் ஜாக்கிரதையாக வழங்க வேண்டும்.

உலகிலே வாழ்ந்து கொண்டு, சரீரத் தேவைகளையும் சந்தித்துக் கொண்டு, ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்வது "எப்படி" என்பது ஒரு சவாலான காரியமாகும். தகப்பன் சம்பாத்யம் பண்ண வெளியே சென்று விடுவதும், தாய் வீட்டில் இருந்து குடும்பத்தை கவனிப்பதும், ஒருவேளை மிக குறைந்த நேரத்தையே ஆவிக்குரியக் காரியங்களுக்காக செலவிட நேரிடும்.

ஆவிக்குரிய வளர்ச்சியடைய தொடர்ந்து கைகொள்ள வேண்டிய சில முக்கிய காரணங்கள்

1. கர்த்தருடைய சபையில் ஒரு விசுவாசமுள்ள நபராக இருத்தல்
2. சபை கூடிவருதலை ஒருபோதும் அசட்டை பண்ணாதிருத்தல்
3. தேவனுடைய உதவிக்காக ஜெபித்து ஒவ்வொரு நாளையும் துவங்குதல்
4. தினமும் குடும்பமாக அமர்ந்து வேதம் வாசிப்பதற்கு நேரத்தை ஒதுக்குதல்.

அநேகக் கிறிஸ்தவக் குடும்பங்களில் பார்த்தால், இவையாவும் ஒழுங்காக அனுசரிக்கப்பட்டும், ஆவிக்குரிய ரீதியில் தேறவேண்டிய

அளவு தேறாமல் இருப்பார்கள். ஆவிக்குரிய காரியங்கள் உயிருள்ள ஒரு நிலையில் இருக்காது. அதற்குக் காரணம் என்னவென்று பார்த்தால் பெற்றோர்களாகிய நாம்தான். பிள்ளைகளுக்கு சொல்லுகிற அளவு நாம் செயலில் காட்டுவதில்லை. இதைத்தான் அன்றைய நாட்களில் இருந்த பரிசேயரைப் பற்றி இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கூறும்போது, "ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள். அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள். ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள் (மத். 23;3) என்றார். இரண்டு மாறுபட்ட கருத்துக்களை பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு முன் வைக்கிறார்கள். தேவன் தான் முக்கியம் என்று தங்கள் வாயினால் பிள்ளைகளிடம் சொல்கிறார்கள். ஆனால் காரியங்களை கையாளுகிற விஷயத்தில் அவர்கள் தேவனுக்கு இடம் கொடாமல் உலக பிரகாரமாகவே ஜீவிக்கிறார்கள்.

உண்மையாகவே நம் பிள்ளைகள் ஒரு ஆழமான ஆவிக்குரிய வாழ்க்கை வாழ வேண்டுமென்றால், அது பெற்றோர்களாகிய நாம் நடத்திக் கொண்டிருக்கும் வாழ்க்கை முறையைத் தழுவியதுதான். சில காரியங்கள் சிந்தனைக்காக.

1. ஆவிக்குரிய குடும்பத்தில் (சபை) அங்கமாக இருக்கும் நான் எந்த அளவு என் சரீர வாழ்க்கையை மாற்றியுள்ளேன், ஒவ்வொரு நாளும், நிமிடம் தோறும் தேவனோடு என்னுடைய உறவு எந்த அளவு உள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கிறிஸ்தவனாக இருந்துவிட்டு, திங்கள் கிழமை எதிர்கொள்ளும் ஒரு பிரச்சினையை எவ்வாறு கையாளுகிறேன்; சோதனைகள் வரும்போது எந்தளவு பொறுமையை காட்டுகிறேன்; ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நான் எந்தளவு உண்மையாயிருக்கிறேன். என்னுடைய அதிகாரிகளுக்கு கீழ்ப்படிகிற விஷயத்தில் நான் எவ்வாறிருக்கிறேன். என்னுடைய எண்ணமும், என் பேச்சும் எவ்வளவு சுத்தமாயிருக்கிறது, என்னுடைய நடத்தையை கிறிஸ்துவின் சிந்தை உடையதாக இருந்தால், பிறகுதான் சுலபமாக கிறிஸ்துவின் போதனைகளை, செயல்களை என் பிள்ளைகளுக்கு புகட்ட முடியும்.

2. தேவனுடைய சமூகத்தில் அவரைத் தொழுது கொள்வது எனக்கு மிக முக்கியமான காரியமாகும். அப்படியானால் என்னைப் பார்த்து என் பிள்ளைகள் வளரும்போது ஆராதிப்பது என்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம் என்று நினைப்பார்கள். பிரசங்கத்தில் கேட்ட கருத்துக்களை அவர்கள் வாரம் முழுவதும் நினைத்துக் கொண்டேயிருப்பார்கள் சபையாக. ஒன்றாக கூடி வரும்போது கிடைக்கும் பலன் அடுத்த முறை கூடுதலை ஆவலோடு எதிர்நோக்கும். ஆவிக்குரிய விஷயங்களைப் பற்றி கலந்தாலோசித்து, ஒவ்வொரு நாளும் செயல்படுவது குடும்ப வாழ்வுக்கு முக்கியமான ஒன்றாகும்.

3. அன்றாட வாழ்வில் நான் பங்கு கொள்ளும் காரியங்கள், என்னுடைய காரியங்களை தேவனுக்கு தெரிவிக்கும் வகையில், ஜெபம் ஓர் உயிரோட்ட கருவியாக உள்ளது. ஏதோ வார்த்தை ஜாலங்களால் ஜெபிக்காமல் தேவனோடு சம்பந்தப்பட்டு உரையாடல் செய்ய வேண்டும்.

தீர்மானங்கள், பிரச்சினைகள், எதிர் பாராமல் கிடைத்த நன்மைகளுக்காக நன்றி சொல்லுதல், பாதுகாப்பு, மற்ற எந்த ஒரு அன்றாட தேவைக்காகவும் ஜெபிக்கப்பட வேண்டும். இதனைப் பார்க்கும் பிள்ளைகள் இயற்கையாகவே ஜெபத்தின் அவசியத்தை உணர்ந்து கொள்வார்கள்.

4. இவ்வுலகில், அறிவியல் உண்மை என்னவென்றால் உயிரற்ற பொருள் புதிய உயிரை உண்டு பண்ண இயலாது. ஆவிக்குரிய வாழ்விலும் இதுதான் உண்மை. இதுதான் சட்டம். உயிரற்ற ஆன்மா மற்றவர்களுக்கு உயிரை கொடுக்கவே முடியாது. நம் பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்வில் உயிரோடு, செழித்து காணப்பட வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழி பெற்றோராகிய நாம். நம் ஆன்மாவை வாழவிட வேண்டும். சிலர் தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாகவும் இருப்பார்கள்" (2. தீமோ. 3;5)

தேவனோடு நாம் ஓர் உயிருள்ள உறவு வைத்திருந்தால் நம் நினைவு, செயல், எண்ணம், போன்றவைகள் தேவனுக்கடுத்தவைகளாக இருக்கும். இதற்காகத்தான் நாம் முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் இந்த விலைமதிக்க முடியாத வாழ்க்கை நம் உடமைகளாகிய பிள்ளைகளுக்கு விட்டுச் செல்ல முடியும்.

கிறிஸ்துவுக்குள் அருமையான தாய்மார்களே! பிள்ளைகளை ஆவிக்கேற்றபடியாக வளர்க்க வேண்டுமானால் நாம் முதலில் வாழ வேண்டும். ஆத்துமாவை வாழ விட்டால்தான் அது உயிர்பெறும். அதைப் பார்க்கும் நம் பிள்ளைகளும் அதை பின்பற்றுவார்கள்.

**B.B. Choate** **R.R. Nayagam**

# நடப்புச் செய்திகள்

- காஷ்மீர் மாநிலத்தின் புதிய முதல் மந்திரியாக முப்தி முகமது சய்யீத் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்.
- மதமாற்றத் தடை சட்டத்திற்கு ஒப்புதல் கொடுக்கக் கூடாதென்று, கிறிஸ்த மற்றும் முஸ்லீம் மதத் தலைவர்களும், தலீத் இயக்கத் தலைவர்களும் தமிழக ஆளுநரை சந்தித்து மனு அளித்துள்ளனர்.
- வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததால் தமிழகத்தின் தண்ணீர் தேவைக்குத் தற்காலிக தீர்வு ஏற்பட்டிருக்கிறது.
- கிரிக்கெட் டெஸ்ட் தொடரில் தோல்வியைத் தழுவிய மேற்கிந்திய தீவுகள் அணி ஒரு நாள் ஆட்டத்தில் சிறப்பாக ஆடி வருகிறது.

# மேகங்களிடமிருந்து

எனக்கன்பான சிறு தம்பி தங்கைககளே! நாம் வாழும் தமிழகத்தில் தற்போது உள்ள சூழலில் கார்மேகங்கள் சூழ்ந்து கடும்மழை பொழிவதை நாம் எல்லோரும் காணும் வாய்ப்பிருக்கிறது. இம்மாதம், இந்த மழை காலத்தில் அனுதினம் காலையில் நாம் காணும் மேகக் கூட்டங்கள் நமக்கு என்ன ஆவிக்குரிய பாடங்களை கற்றுத் தருகிறது என்பதை கவனிப்போம்.



இயேசு கிறிஸ்து வாழ்ந்த பாலஸ்தீனா தேசத்திலே, வருட முழுவதும் சமமான சீதோஷ்ண நிலையே காணப்படும். இந்த அழகான நாட்டின் கிழக்கு திசையிலே ஒரு வனாந்தரமும், மேற்கு திசையிலே மத்திய தரைக்கடல் பகுதியும் அமைந்துள்ளது. இந்த கடலிலிருந்து வருகின்ற காற்று ஈரப்பதத்தோடு நாட்டை நோக்கி வீசுகிறது. இந்தக் காற்று பெரிய மழை "மேகங்களை" உருவாக்குகிறது. சரி இப்போது நாம் பாடத்திற்குள்ளாக செல்வோம், வாருங்கள்! ஆம்! தேவன், வேதாகமத்தை எழுதியவர்களை கொண்டு இந்த மேகங்களின் மூலம் சில ஆவிக்குரிய விசேஷமான உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார். அதிலே சிலவற்றை நாம் இங்கே பார்ப்போம்.

**முதலாவதாக**

பழைய ஏற்பாட்டில், பலமுறை மேகங்கள் நம் தேவனின் மகிமையை காண்பிக்கிறதற்காகவும் அவர் இருக்கிறார் என்று தெளிவுபடுத்துகிற சின்னமாகவும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இக்கருத்தை பற்றியதான வேத உதாரணத்தைப் பார்ப்போம். உதாரணமாக தேவன் மோசேயிடம் என்ன கூறுகிறார் தெரியுமா? வேதாகமத்தை கையில் எடுத்துக் கொள்ளுங்கள். எடுத்து விட்டீர்களா? யாத். 19;9 எடுத்து படியுங்கள். மோசேயே "நான் உன்னோடே பேசும்போது ஜனங்கள் கேட்டு, உன்னை என்றென்றைக்கும் விசுவாசிக்கும்படி, நான் கார்மேகத்தில் உன்னிடத்தில் வருவேன்" என்று சொல்லுவதைப் பார்க்கிறோமல்லவா? ஆம், தேவன் எபிரேய மக்களுக்கு பத்து கட்டளைகளை கொடுக்கிறபோது தேவன் இடிகளையும், மின்னல்களையும் வரப் பண்ணினார். இது நம் தேவனின்

மகத்தான வல்லமையை எடுத்துக் காட்டியது. இதிலிருந்து நாம் என்ன கற்றுக் கொள்கிறோம்? "தேவன் நம் கனத்திற்கு பாத்திரராய் இருக்கிறார்".

**இரண்டாவதாக**

சரி மேகங்கள் இன்னும் என்ன கருத்துக்களை கற்றுத் தருகின்றன. வாருங்கள், மேலும் சிந்திப்போம்!

நாம் முன்னே பார்த்ததான பாலஸ்தீனா தேசத்திலே மேகங்கள் பொதுவாக அதிகாலையில் தோன்றி வெதுவெதுப்பான மதிய பொழுதிலே கலைந்து போம். இந்த இயற்கை நிகழ்ச்சி நமக்கு என்னென்ன கருத்தை உணர்த்துகிறது? சற்று ஆழ்ந்து சிந்தித்தால் அது "காரியங்கள் எவ்வளவு சீக்கிரமாய் கடந்து போகும்" என்று உணர்த்துகிறது. இப்பொழுது யோபுவை உதாரணமாக எடுத்துப் பாருங்களே. அம் மாமனிதன் பெரும் ஆஸ்தியை உடையவன், அதாவது சீமான் ஆனால் தேவன் அவனை சோதிக்க சாத்தானுக்கு அனுமதி கொடுத்தார். அதன் விளைவாக என்ன நடந்தது தெரியுமா? அவனுடைய எல்லா சொத்துக்களும் அழிந்து போயின. அவன் என்னவென்று புலம்பினான் தெரியுமா? வாசியுங்கள் (யோபு. 30;15).

என் சுகவாழ்வு மேகத்தைப் போல் கலைந்தது என்று புலம்புகிறார். இதன் மூலம் நாம் கற்றுக் கொள்ளும் பாடம் என்ன? இதை

இயேசு கிறிஸ்துவே புதிய ஏற்பாட்டில் சொல்லிவிட்டார். (மத். 6;19) ஆம், பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம். பின்னே எங்கே சேர்த்து வைப்பது? என்றா கேட்கிறீர்கள் அதையும் அவரே சொல்லிவிட்டார் தொடர்ந்து அந்த பகுதியை படியுங்கள், பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள் என்றார்.

**கடைசியாக** மற்றொரு பாடத்தை குறித்தும் பார்ப்போமா?


இஸ்ரவேலர்கள் அடிமைகளாகி இருந்த காலம் முடிந்து எகிப்திலிருந்து வெளியே வரும்போது தேவன் அவர்களை வழிநடத்தினார், எப்படி வழி நடத்தினார் என்று பார்ப்போமானால், அவர்களை தூண்வடிவிலான "மேகங்களை" கொண்டு வழி நடத்தினார். வேத எழுத்தாளர் ஒருவர் சொல்லும்போது (நெகேமியா. 9:19)ல் "அவர்களை வழிநடத்தப் பகலிலே மேகஸ்தம்பமும்" என்று கூறுகிறார். சரி, இந்த "மேகம்" நமக்குத் கற்றுத்தரும் பாடம் என்னவென்று நாம் சிந்திப்போமானால் "**நாம் தேவனை பின்பற்ற வேண்டும்**". அவர் எப்பொழுதும் உண்மையுள்ள வழி காட்டியாக நமக்கு இருப்பார் என்பதுவே.

மேகத்திடமிருந்து சில பாடங்களை இம்மாதம் கற்றுக் கொண்ட நாம், தேவனுக்கு சித்தமானால் அடுத்தமாதமும் சில பாடங்களை கற்றுக்கொள்வோம். நம்மை நேசிக்கிற தேவன் நமக்குத் தரும் பாடங்களை கற்று கடைபிடித்து அவருக்கு உண்மையாக வாழுவோம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!.

**R. Abel Rodger Nayagam**

# ஐந்தாவது வேதாகம

## அக்டோபர்



கருத்தரங்கம் நடைபெற்ற சபை கூடும் கட்டிடத்தின் முகப்புத் தோற்றம்.





கருத்தரங்கில் கலந்து கொண்டோரின் ஒரு பகுதி

# கருத்தரங்கம்- காங்கேயம்

## 14, 15 - 2002



கருத்தரங்கில் பங்கு பெற்றோரின் மற்றொருபகுதி



ஐந்தாவது கருத்தரங்கில் கருத்துரை நிகழ்த்தும் கருத்தாளர் சகோ. ஏசையன் (சென்னை).

# கேள்விகள் மூன்று

மனிதன் தன் வாழ்க்கையில் அறிவுபடிகளில் ஏறி சாதனை வானங்களில் சிறகடித்து பறக்க வேண்டுமானால், தன் மனது எழுப்பும் அநேக கேள்விகளுக்கு பதில் காண வினையத்துடன் முற்படவேண்டும். ஞானத்தின் முதல் திறவுகோலே, அடிக்கடி விடாமுயற்சியுடன் கேட்கப்படும் கேள்விகளே என்பதால் நமது வாழ்க்கையின் எந்த பகுதியிலும் கேள்வி கேட்பதை நாம் நிறுத்தி விடக் கூடாது. விவேகத்துடன் கேட்கப்படும் கேள்வி அறிவின் அறைப்பகுதி என்றால் அது மிகையாகாது, என்பதால் வளரும் பருவமான வாலிபப் பிராயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் எப்படிப்பட்ட மனநிலையோடு கேள்விகளை கேட்கிறோம் என சீர்தூக்கிப் பார்க்கவேண்டியது அவசியம்.

தாவீதின் புதல்வனாகிய சாலொமோனுடைய ஞானத்தைக் குறித்து கேள்விப்பட்டாள், தென்தேசத்து ராஜஸ்திரீ. இஸ்ரவேல் ராஜாவின் ஞானத்தை தரம் பார்க்க வேண்டும், அதன் ஆழத்தை அளந்துவிட வேண்டும் என்று நினைப்புடன், தங்கத்தை உரசிப்பார்ப்பதைப் போல ஞானத்தை அலசிப் பார்க்கும்படி வருகையில் தமிழ்வேதாகமம் **"விடுகதைகளினால் அவனை சோதிக்கும்படி"** (1.இராஜா.10;1) என்று எழுதிக் கொடுத்திருந்தாலும், ஆங்கில வேதத்தில் "விடுகதை" என்கிற பதத்திற்கு **"Hard Questions (NKJV)" (கடினமான கேள்விகளோடு)** என்ற இரண்டு வார்த்தைகள் போடப்பட்டிருக்கிறது. ஞானத்தை சோதிக்கக் கேள்விகள் தான் பயன்படுகிறது என்பதை அறிகிற நாம், நீ தவறு செய்தாய் என்று ஒருவரிடம் சுட்டிக் காட்டும் போது அவர் கேட்கும் கேள்விகள் மூன்று வகையாக இருக்கும் என்பதை கவனிப்போம் வாருங்கள்.

## I. நான் என்ன செய்தேன் . . .?

வாக்குத்தத்த தேசத்தில் இஸ்ரவேல் குடியேறியபின் சுற்றம் பார்த்து தங்களுக்கும் அரசன் வேண்டுமென்ற அவசர முடிவை எடுத்து, கழுதையைத் தேடிப்போன சவுல், ஆடு மேய்த்த தாவீது, அவன் குமாரன் சாலொமோன் ஆகியோர் செங்கோல் செலுத்தியதற்குப் பின், இஸ்ரவேலில் ஆட்சியின் செங்கோல், கொடுங்கோல் ஆட்சிதான் செய்வேன் என்ற ரெகோபெயாமின் வரட்டுப் பிடிவாதத்தால் இரண்டாக பிளவுபட்டது. இஸ்ரவேல் என்னும் 10 கோத்திரமும், யூதா, பென்யமீன் என்ற இரண்டு கோத்திரமும் தனித்தனியே அரசு கொண்டார்கள். இஸ்ரவேல் இராஜ்ஜியத்தின் ஆரம்பமே கோணலாய் இருந்தது. கி.பி. 722-ல் சரித்திரத்தின் பக்கங்களிலிருந்து அசீரியர்களால் அந்த அரசு அகற்றப்பட்டு முற்றும் கோணலாக முடிந்தது.

இஸ்ரவேல் அகற்றப்பட்டதற்கு காரணமாக இருந்த இரண்டு பெரும் பாதகங்கள் என்னவென்று கேட்கும்போது, முதலாவதாக எழுந்து நிற்பது

விக்கிரக ஆராதனை, இரண்டாவதாக விபச்சாரம், இந்த இரண்டு காரணங்களையும் யூத ஜனங்கள் கண்கூடாக பார்த்தனர். தங்களுக்கு முன் திருஷ்டாந்தமாக வைக்கப்பட்ட இஸ்ரவேலரைக் கண்டு, இவர்களாவது, "நான் என்ன செய்தேன்? (எரே.8;6) இப்படிச் செய்யலாமா? இஸ்ரவேல் இப்படி செய்ததினால் அவனுக்கு வந்த நிலையை பார்த்தும் நானும் அப்படியே செய்யலாமா? நான் என்ன செய்தேன் ஐயகோ; உடனே திரும்புவேன் என் தேவனிடம் என்று சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தால் ஏமாற்றம் தான் மிஞ்சும்.

யூதா தேசம் இப்படி செய்யாமல், **நான் அப்படி என்ன செய்துவிட்டேன்?** என்பதைப் போல் கேட்டு, யதார்த்தமாக பேசாமல், ஆணவமாக பேசியிருக்கிறது. வாலிபரே, அவர்களது நிலையைக் காண்டீர்களே. இன்றும் கூட அநேக வாலிபர்கள் இவர்களை போலவே, தம்பி, அம்மா, அப்பா உங்களை கஷ்டப்பட்டு படிக்க வைக்கிறார்கள். தங்கள் செங்குருதி சிந்தி, அல்பகல் உழைத்து சம்பாதித்த பணத்தை உங்களுக்காக செலவு செய்யும் போது அதை வீணாக்காதீர்கள் என்று சொன்னால், **அப்படி நான் என்ன உலகத்தில் இல்லாததை செய்து விட்டேன்? என்கிறார்கள்.** புகையும், பாக்கும் உங்கள் உடலுக்கு நல்லதில்லை என்று புத்தி சொன்னால், கண்களை கத்தியாக்கி பகை கொள்கிறார்கள். நாம் இப்படி இருக்கலாகாது, **அனுபவமிக்கோர் அறிவுரை செய்தால், வாலிபம் என்னும் வழுக்கு நிலத்தில் நடக்கும் நாம் அதை உதவிக்கு ஊன்றுகோலாக கொள்ளல் வேண்டும்.**

## II. நான் என்ன செய்ய வேண்டும்?

ஏதேன் தோட்டத்தில் ஏமாற்றப்பட்ட மனித குலத்தை மீட்கும்படியாக எருசலேம் நகரின் அருகாமையில் அமைந்திருக்கும் கெத்செமனே என்கிற தோட்டத்தில் தன் பரிசுத்த இரத்தத்தை வியர்வைத் துளிகளோடு சிந்தினார் நமது ஆண்டவர் இயேசு. கள்வனை கடும் காவல் வலைபோட்டுப் பிடிப்பது போல இறைமைந்தனை கயவர்கள் கைது செய்தனர், ஆண்டவரோடு மக்களை இணைக்கும் பாலமாக திகழவேண்டிய ஆசாரியர்கள் மனுக்குல மைந்தனை சித்திரவதை செய்யும்படி முனைவதை நாம் காண்கிறோம். விசாரணைக்காக இரணவேதனையுடன் இயேசு பிலாத்துவின் முன் நின்று கொண்டிருந்தார். பொறாமையினால், இந்த பாதகர்கள் பாவமில்லாத இயேசுவை ஒப்புக் கொடுத்தார்கள் என்ற உண்மை தேசாதிபதிக்கு புலப்பட்டது.

உண்மையை அறிந்த பிலாத்து இவர்களது முகத்திரையை கிழித்து எறிந்திருக்க வேண்டும். ஆனால், அவரோ அவர்களை நோக்கி, "நான் யூதருடைய ராஜாவை உங்களுக்கு விடுதலையாக்க வேண்டு மென்றிருக்கிறீர்களோ என்று கேட்டான்" (மாற்கு 15;10) யார் இயேசுவை பிடித்து சிலுவையில் அறையும்படி தீவிரம் காட்டினார்களோ, யார் பொய்சாட்சிகளை ஜோடித்து உலக ஜோதியாகிய இயேசுவை அணைத்துப்போட கங்கணம் கட்டினார்களோ அவர்களிடமே, நான் என்ன செய்ய வேண்டும்? என்று சகல அதிகாரமும் பெற்றிருந்த தேசாதிபதி கேட்கிறார். இந்த கேள்வியை அவர் கேட்காமலேயே இருந்திருக்கலாம்.

வாலிபர்களாகிய நாமும் சிலவேளை நாம் எடுக்க வேண்டிய முடிவுகளை நாமே யோசித்து, அனுபவமுடையவர்களின் அறிவுரையை கொண்டு முடிவெடுப்பதை விடுத்து, நம்மை பாவ வழியில் நடத்த யார் ஆயத்தமாக இருக்கிறார்களோ, யாரால் பிரச்சினை வந்து சேருமோ, யார் நம்மை பாவம் செய்ய தூண்டுகிறார்களோ, அவர்களிடமே நாம் சென்று ஆலோசனை கேட்கிறோம். அவர்கள் என்ன சொல்வார்கள். தங்களுக்கு சாதகமாக சில காரியங்களை அதுவும் நம் மீது அதிக அக்கறையிருப்பது போல பாசாங்கு செய்து எடுத்துரைப்பார்கள். நாமும் அதை நம்பி ஏமாந்து போய்விடுவோம். இப்படி நாம் செய்யாமல், நாம் என்ன செய்ய போகிறோம் என்பதை நாமே யோசித்து, வேத புத்தகத்தின் துணையுடன் ஆவிக்குரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு பெற்று காரியங்களைச் செய்ய வேண்டும்.

## III. சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

காலமெல்லாம் மரணத்தின் அகோரபிடியினால் பயத்தில் வாடிக்கிடந்த மனுக்குலத்தின் முகத்தில் புதுமலர்ச்சி கொடுப்பதற்காக மரணத்தை ஜெயித்தெழுந்த வானபரன் இயேசு, வான்படியேறி விண்ணுலகம் சென்ற நாளிலிருந்து, ஐம்பதாவது நாளில் இயேசுவினால் இப்பூமியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அப்போஸ்தலர்கள் தாங்கள் இதுவரை கற்றிறாத பற்பல மொழிகளில் பேசினார்கள். எருசலேமில் பண்டிகைக்காக கூடிவந்த ஜனம் இதை கேட்ட போது ஆச்சரியத்துடன் இதெப்படி நடக்கிறது என்கிற கேள்வியை கேட்டார்கள்.

பேதுரு அவர்களுக்காக ஒரு வல்லமையான பிரசங்கத்தை செய்தான். இயேசுவை சிலுவையில் அறையும் பாவத்தை செய்தீர்கள் என்று வேத வாக்கியங்களைக் கொண்டு தெளிவுபடுத்திய உடனே, அங்கு கூடியிருந்த ஜனங்கள் "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள். **உலக தோற்ற முதல் கேட்கப்பட்ட கேள்விகளில் இதை விட சிறந்த கேள்வி எதுவுமில்லை என்பதில் எள்ளின் முனை அளவு கூட சந்தேகமில்லை.** சரியான நேரத்தில், சரியான மனநிலையுடன், சரியான நபரிடத்தில் கேட்கப்பட்ட கேள்வி. மேசியாவை கொலை செய்த பாவத்தை செய்தீர்கள் என்று சொன்னவுடன், இவர்கள் மீதும் கோபம் கொண்டு மேலும் பாவம் செய்யாமல் பாவத்தை களைந்து போட வேண்டும் என்ற நோக்குடன் கேட்கப்பட்ட, கேள்வி இது.

வாலிபர்களே! நமது வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட கேள்வியை நாம் கேட்டு பயன்பெற வேண்டும். ஒரு மனிதன் கேட்கும் கேள்வியைக் கொண்டு அவன் எப்படிப்பட்டவன் என்பதை நிதானித்துக் கொள்ளலாம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு அறிஞன் கூறுகையில், என் வாழ்க்கையில் நான் கற்றவைகளை எல்லாம் எனக்கு கற்றுத்தந்த ஆறுநபர்களை மறக்கவே மாட்டேன். அவர்கள், யாரென்றால் எதற்கு? ஏன்? எப்படி? எங்கே? என்ன? யார்? என்கிற ஆறுநபர்கள் தான் என்கிறார். நாமும் நம்முடைய நன்மைக்காக ஆவிக்குரிய நோக்கத்துடன் கேள்விகளை கேட்டு பயன் அடைவோமாக. ஆமென்.

**ஜே.பிக்கின்ஸ்**

# அப்போஸ்தலருடைய நடபடிகள் ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : **லூக்கா**

காலம் : **ஏறக்குறைய சுமார் 62-63 கி.பி.**

## இந்நூலைப்பற்றி...

1. இயேசுவைப் பற்றிய "முதலாம் பிரபந்தத்தை உண்டு பண்ணினேன்" (1;2) என்று ஆசிரியர் தெயோப்பிலுவுக்கு எழுதினதினால், இந்நூலையும் லூக்காவே எழுதியிருப்பார் என்ற முடிவுக்கு வருகிறோம். ஏனென்றால் லூக்கா தன் சுவிசேஷ நூலையும் இந்நபருக்கே எழுதி இருக்கிறார் (லூக்கா.1;1)
2. இந்நூல் ஆதியாகமத்தைப் போலவே "ஆரம்பங்களின் புத்தகம்" என்று அழைக்கப்படுகிறது. மனந்திரும்புதல், பாவமன்னிப்பு, கிறிஸ்துவின் சபை. புறஜாதிகளின் இரட்சிப்பு இன்னும் பல விஷயங்கள் இந்நூலில் ஆரம்பமாகிறது.
3. "மார்க்கம்" என்கிற சொல் இந்நூலில் அதிகமாக இடம்பெற்றுள்ள வார்த்தையாக இருக்கிறது. 29-30 வருடங்களின் வரலாறை தனக்குள்ளாக அடக்கியிருக்கிறது.
4. இந்நூலின் முதல் 13 அதிகாரங்களில் பேதுருவும், அடுத்த 15 அதிகாரங்களில் அப்போஸ்தலனாகிய பவுலும் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.
5. மனித குலம் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற மகா பெரிய கேள்வி இந்நூலில் இடம் பெற்றிருக்கிறது. அதற்குரிய பதிலும் இந்நூலால் கொடுக்கப்படுகிறது.
6. "நாங்கள்" என்று ஆசிரியர் தன்னையும் சேர்த்து எழுவதில் மூலம் (16;10, 20;5 21;1 27;5) அவரும் அப்போஸ்தலனாகிய பவுலுடன் சேர்ந்த சுவிசேஷ பிரயாணம் மேற்கொண்டார் என்பது தெளிவாகிறது.
7. இந்நூல் பரிசுத்த ஆவியானவரின் பணி குறித்து அநேக காரியங்களை விவரிக்கிறது. பவுல் எழுதின சில நிருபங்களுக்கு இந்நூல் பின்னணியாக இருக்கிறது

## இந்நூலின் செய்தி...

1. சுவிசேஷத்தால் மாத்திரமே ஒரு மனிதன் இரட்சிக்கப்பட முடியும்
2. கிறிஸ்தவம் என்பது ஒரு தேசத்து மக்களுக்கு மாத்திரமான மார்க்கமல்ல, சர்வ உலகத்திற்கும் இம்மார்க்கம் பொருந்தும்
3. இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுவதின் மூலம் தேவன் தன்னை உண்மையுள்ளவர் என்று வெளிப்படுத்துகிறார்.

# தவறுகளை ஒப்புக்கொள்ளும்போது

தவறுகளை ஒப்புக்கொள்வதென்பது ஓர் உயரிய பண்பு. இதனால் வளரவும் முன்னேறவும் வாய்ப்புகள் பிறக்கின்றன. எந்தக்காரியமும் எப்போதும் தவறில்லாமல் யாரும் செய்தார்கள் என்பதோ, செய்ய முடியும் என்பதோ உண்மையல்ல, தவறு செய்வது மனித இயல்பு. மன்னிப்பது தெய்வத்தன்மை. ஒரு கணக்குப் போடும்போது ஒரு கூட்டல், கழித்தலில் தவறு இருக்குமானால் கூட சிலர், நான் போட்ட கணக்கில் தவறு இருக்காதென்று வாதிடுவதைப் பார்க்கலாம். இப்படிப்பட்டவர்கள் தங்களை திரும்பி வரமுடியாத மூலைக்கு எடுத்துச் செல்கிறார்கள். மனித உறவுகளில் நாம் தவறான காரியம் என்று உணரும்போது, காரியம் நடந்து போனதாய் இருக்கும். திருத்தமுடியாத நிலை இருந்தாலும் தவறுகளை ஒப்புக் கொள்ளும்போது, நமது மனம் லேசாகிறது. குற்ற உணர்வு குறைகிறது. எதிரியும் மன்னித்து மறந்துவிடும் நிலைக்கு இறங்குகிறார். மீண்டும் உறவுகள் சமநிலையில் துளிர்கின்றன. தவறு ஒரு மனிதனை மூடனாக்குகிறது. கீழ்படியாமையை காண்பிக்கிறது. வேதாமகத்திலே சொல்லப்பட்ட ஒரு ராஜாவை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இஸ்ரவேல் மக்களுக்காக தேவன் சாமுவேல் தீர்க்கதரிசியின் மூலமாக அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு மனிதனுக்கு. தேவன் சாமுவேலின் மூலமாய் ஒரு கட்டளையைக் கொடுத்தார். (1சாமு : 15:3)

இப்போதும் நீ போய் அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து அவன்மேல் இரக்கம் வைக்காமல் புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், ஆடுகளையும், மாடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்று போடக்கடவாய் என்கிறார் என்று சொன்னான். ஆனால் சவுல் அப்படிச் செய்யாமல் அமலேக்கியரின் ராஜாவாகிய ஆகாகை உயிரோடே பிடித்தான், ஜனங்கள் யாவரையும் பட்டயக் கருக்கினாலே சங்காரம் பண்ணினான். சவுலும், ஜனங்களும் ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல் தரமானவை களையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக் குட்டிகளையும் நலமான எல்லாவற்றையும் அழித்துப் போட மனமில்லாமல் தப்பவைத்து அற்பமானவைகளும் உதவாதவைகளுமான சகல வஸ்துகளையும் முற்றிலும் அழித்துப் போட்டான். (1சாமு: 15:8,9) கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்று சாமுவேல் தீர்க்கதரிசியிடம் பொய் சொன்னான். இங்கே சவுல் செய்த தவறு அவனுடைய மூடத்தனத்தையும் கீழ்படியாமையையும் எடுத்துக்காட்டுகிறது. அவனுடைய கீழ்படியா மையையும் செய்த குற்றத்தையும் அவனோடு இருந்தவர்களும் செய்ய நேர்ந்தது.

பிறகு சவுலின் தவறுகளை சாமுவேல் கண்டித்தபோது தான் தேவனுக்கு விரோதமாக தவறு(பாவம்) செய்துவிட்டேன் என்று சாமுவேலினிடத்தில் மன்றாடிக்கேட்டான். பிறகு அவன் தேவனைத் தொழுதுகொண்டான். (1சாமு:

15:30, 31) இந்த நிகழ்ச்சியிலிருந்து நாம் என்ன பாடத்தை கற்றுக் கொள்ளுகிறோம்? நாம் எத்தனையோபேர் இந்த சவுலைப் போல தவறு செய்துக்கொண்டிருக்கிறோம். மற்றவர்கள் அந்தத் தவறை சுட்டிக்காட்டி உணர்த்தும்போது நாம் அந்த தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டோமானால் தேவனுடைய தயவைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது உறுதி.

பவுல் கலாத்திய விசுவாசிகளை புத்தியில்லாத கலாத்தியரே என்று அழைப்பதைக் கவனிக்கவும். (கலா 3:1) "புத்தியில்லாத" என்ற சொல் தவறான எண்ணம், சிந்தனையற்ற நிலை என்று சொல்லப்படுகிறது. இந்த நிலையில் இருப்பவர்கள் தவறு செய்தாலும் கவலையில்லாமலும், அதனால் தங்களுக்கு ஏற்படும் அவப்பெயரை குறித்து கவலை ப்படாமலும் இருப்பார்கள். கலாத்திய நாட்டு சபைமக்கள் இவ்விதமாய் இருந்தார்கள் என்று வேதம் சொல்லுகிறது. ஆகவே, பவுல், அவர்கள் செய்து கொண்டிருந்த தவறுகளை சுட்டிக்காட்டி அந்தத் தவறுகளை உணர்த்தி அவர்களை சரிப்படுத்துகிறார். கிறிஸ்தவர்களாகிய நாமும் கூட இப்படித்தான் செய்யவேண்டும் என்று வேதம் நமக்கு போதிக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து, தெய்வ பயத்தோடே (கிறிஸ்துவைப் பற்றும் பயத்தோடே) ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள். (எபே : 5:20,21) என்று வேதாகமம் திட்டவட்டமாக போதிக்கிறது. ஆனால் எல்லோரும் இந்த வசனத்தின்படி செய்கிறார்களா என்றால், நிச்சயமாக இல்லை. சிலரைத் தவிர ஜெபம் செய்வதில் பாடல்பாடுவதிலும் இன்னும் தவறு செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால்அவர்களின் தவறுகளை சரி என்று சொல்லிக்கொண்டு தவறான போதனைகளை போதித்துக் கொண்டு விசுவாசிகளை தவறான போதனையில் வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எபே 5:20 ல் எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் என்ற வார்த்தையை கோடிட்டுக்காட்டி நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

அநேகர் ஜெபத்திலே ஆண்டவரே ஆண்டவரே என்று பேசிவிட்டு கடைசியில் முடிக்கும்பொழுது ஆண்டவர் இயேசுவின் மூலம் கேட்கிறோம் எங்கள் பிதாவே என்று முடிக்கிறார்கள். பாடல் பாடும்பொழுதும் இயேசுவை துதிக்கிறோம் என்று பாடுகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் மூலமாய் பிதாவாகிய

## சமாரியாவைப் பற்றி...

இது உம்ரி என்னும் இஸ்ரவேலின் ராஜா சேமேர் என்பவனின் வசத்திலிருந்த மலையை இரண்டு தாலந்து வெள்ளி காசுக்கு வாங்கி அந்த மலையின் மேல் ஒரு பட்டணத்தைக் கட்டி அதற்கு சேமேரின் பெயரின்படியே சமாரியா என்னும் பெயரைத் தரித்தான். அங்கு வசிப்பவர்கள் சமாரியர் என்று அழைக்கப்பட்டனர். ( 1. இராஜாக்கள் 16:21-24)

தேவனை துதிக்க வேண்டும் என்று வேதவசனம் நமக்கு வலியுறுத்துகிறது. (கொலோ: 3:17) அதுமட்டுமல்ல (அப்: 2:36 ல்) ஆகையால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவு மாக்கினாறென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவீர்கள் என்றான். வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று வேதாகமம் தெளிவாய் எடுத்துக்காட்டுகிறதை பார்க்க முடியும். தவறு ஒரு மனிதனை மூடனாக்குகிறது என்று (கலா 3:1ல்) பார்த்தோம். போதிக்கப்பட்டது உண்மையா, இல்லையா என்பதைக் கண்டறியவும் ஆவலின்றி இருந்தனர். சிந்திக்கவும் திறனற்ற அறிவில்லாத மக்களைப் போல அவர்கள் புத்தியில்லாமல் இருந்தனர். தவறு ஒரு மனிதனை வஞ்சிக்கிறது. மயக்குவது தவறாக வழி நடத்துவது விசுவாசிகளை மயங்கவைப்பதும், வஞ்சிப்பதும் தவறாகும்.

தவறு கீழ்படியாமையைக் காண்பிக்கிறது. கலாத்திய நாட்டு சபையார் சத்தியத்திற்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் தேவனுக்குப் பிரியமானவர்களாக மாற கிறிஸ்துவின் மரணத்தை நம்புவதைப் பார்க்கிலும், மதச்சடங்குகளையும் பாரம்பரியத்தையும் கைக்கொண்டு நியாயப் பிரமாணத்திற்கு கீழ்படிந்திருந்தார்கள். தவறு ஒரு விசுவாசியை கிறிஸ்துவிடமிருந்து பிரித்துவிடுகிறது. வேதாகமம் தெளிவாய்ச் சொல்லுகிறது. ஒருவன் தன் தவறை (குற்றத்தை) உணரவேண்டும். இருதயத்தில் உணர்வு வேண்டும். உண்மையான ஒரு விசுவாசி தன் தவறை திருத்திக்கொள்கிறான். ஒரு குயவனுடைய கடையில் கொஞ்சநேரம் உங்கள் நேரத்தை செலவிட்டிருப்பீர்கள் என்றால், குயவனுடைய வேலையை உற்றுநோக்குவதால் கவரப்படுவீர்கள். சிறிது சாதாரண களிமண்ணைக் கொண்டு தன்னுடைய சக்கரத்தின் மீது அழகான உருவத்தை குயவன் உருவாக்குகிறான். சரியான உருவம் வரவில்லை என்பது அவனுக்குத் தெரிந்தவுடன் தன்னுடைய வேலையை அழித்துவிட்டு திரும்பவும் களிமண் குவியலாக்கிவிடுகிறான். "எவ்வளவு நேரம் வீணாகிவிட்டது" என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், மிகத் தேர்ந்த குயவனின் கண்ணோ, குறையை எளிதில் கண்டுக்கொள்வதால் தான் செய்ததில் ஏற்பட்ட குறைவை அப்படியே விட்டுவிட அவனுக்கு மனதில்லை. தரம் வாய்ந்த படைப்புகளை உருவாக்க அவனுக்கிருந்த ஒப்படைப்புத் தன்மையினால் அவனுக்குத் தரக்குறைவான ஒரு வேலையைச் சரிசெய்ய ஆவல் பிறக்கிறது. அதைப் போலவே கிறிஸ்தவ விசுவாசி சபையில் தவறுகளை திருத்திக் கொள்வதில் ஒப்படைப்புத் தன்மை பெற்றிருத்தல் வேண்டும். கிறிஸ்தவ குயவர்கள் பண்பு, தரத்திற்கு ஒப்படைக்கும் தன்மை பெற்றிராததால், அநேக கிறிஸ்த வரல்லாதவர்கள் பதில்களை தேடிக்கொண்டிருப்பதைப் பார்க்கி றோம். கள்ளப் போதனைகளைக் கண்டறிவதற்கும், தவறான போதனைகளை விட்டொழிப்பதற்கும் நாம் முன் வரவேண்டும். அப்பொழுது தான் நம்முடைய சாட்சி சுத்தமானதாவும், அவிசுவாசிகளுக்கு ஊக்கமூட்டுவதாகவும் இருக்கும்.

**யோசுவா செல்வம்,**

# தேவபக்தியுள்ள வாழ்க்கைக்கு சபை தேவனுடைய அடிப்படை மாதிரியையே பற்றிக் கொண்டுள்ளது

எபிரேயர்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்த பின், தனது ஜனங்களுக்காக கொடுக்கத் திட்டமிட்டிருந்த உயர்வான அழைப்பை தேவன் அவர்களுக்கு முன்பாக வைத்தார். "நான் பரிசுத்தர் ; ஆகையால் . . . பரிசுத்தராயிருப்பீர்களாக" (லேவி.11;44). அவ பக்தியாய் வாழ ஏதுவானவைகளைப் பெற்றுள்ள இந்த உலகம், அஞ்ஞான தேசம் என பேர் பெறும், பரிசுத்த தேவன் அழைத்து, ஒரு நீதியுள்ள வாழ்க்கையை வாழும்படியான அடிப்படை அளவுகோலைக் கொடுத்து, அவர் பரிசுத்தராயிருக்கிறது போல நாமும் பரிசுத்தராயிருக்கும்படி எதிர் பார்க்கிறார்.

புதிய உடன்படிக்கையிலும் (புதிய ஏற்பாட்டிலும்) தமது சபைக்கு அதே விதமாக காரியத்தை தேவன் கேட்பது எவவகையிலும் ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடுமா! தேவன் மாறாதவர், ஆதலால், தமது சபையாகிய இன்றுள்ள தமது மக்களை தமது தன்மையில் பங்கேற்கும்படி கேட்கிறார் (2. பேதுரு.1;4) இப்படியாகத் தமது பரிசுத்தத்தைப் பின்பற்றும்படி எதிர்பார்க்கிறார். உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. (1.பேதுரு.1;15,16)

## பரிசுத்தத்தை குறித்த தவறான அளவீடு

ஒருவருடைய அன்றாட ஜீவியத்திற்கு நீதியாய் நடக்க சில வரைமுறை (அளவீடு) தேவை, ஆனால், அந்த வரைமுறை என்ன? மனிதர்கள் பெரும்பாலும் தவறான வரைமுறை அளவீட்டை தங்கள் நீதிக்காக கொண்டுள்ளனர்.

இஸ்ரவேலர்கள் தங்களுடைய அண்டை நாட்டவர்களைப் போல் வாழ வகைதேடுவது எளிதாக இருந்திருக்கலாம். எப்படியிருப்பினும் தேவன் அவர்களை எகிப்திலிருந்த அழைத்து வந்ததை ஞாபகப் படுத்துகிறார் (லேவி.11;45), இப்படியாக அவர்கள் அந்த நாட்டவர்களைப் போல இருப்பதன் மூலம் நீதியைச் செய்வதாக தீர்மானிக்கக் கூடாது என்று எதிர்பார்த்தார். "நீங்கள் குடியிருந்த எகிப்து தேசத்தாருடைய செய்கையின்படி செய்யாமலும், நான் உங்களை அழைத்துப் போகிற கானான் தேசத்தாருடைய செய்கையின்படி செய்யாமலும் அவர்கள் முறையின்படி நடவாமலும் . . . இருங்கள் என்றார். (லேவி.18;3) மனித வரலாறு தேவனுடைய உபதேசத்தின்படி நடவாத மனிதர்களின் வரலாறாக இருக்கிறபடியால், மற்றவர்கள் செய்வது போல நாமும்

செய்வது தான் நீதி என எண்ணுவது மதியீனமானது. "தீமை செய்ய திரளானவர்களைப் பின்பற்றாதிருப்பீர்களாக..." என்கிறது தேவனுடைய அறிவுரை (யாத்.23;2), அநேகர் செய்வதை நாமும் செய்வதே நீதி எனும் அளவீடல்ல என நினைவுறுத்தலாக இருக்க வேண்டும். அநேகர் தேவனுடைய போதனையின்படி ஜீவிக்க மாட்டார்கள் என்று இயேசு தாமே காட்டினார் (மத்7;13,14)

சிலர் தங்கள் பெற்றோர் தங்களுக்கு சொல்லிக் கொடுத்த அளவீடுதான் நீதியுள்ள வாழ்க்கை நடத்த சரியான அளவீடு என்ற நிலையை அமைத்துக் கொள்கின்றனர். பெற்றோர் பாவமற்றவர்களாக வாழ்ந்திருந்தால், அது நீதிக்கான அளவீடாகக் கொள்ளலாம். ஆனால் அது உண்மையல்ல (ரோம:3;23). தம்மைப் பின்பற்றி வருவது சில வேளைகளில் பெற்றோர்களை விட்டு வருவது என இயேசு விரும்பினார். (மத்தேயு.10;37). எனவே பெற்றோர்களின் உபதேசம், எவ்வளவு தான் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும் அதுவே நீதியுள்ள வாழ்க்கைக்கான அளவீடாக இருக்க இயலாது.

வேறு சிலர் நன்கு கல்வி கற்றவர்கள் நீதிக்கான அளவீடாகக் கருதுகின்றனர். ஆகிலும் தேவனிடத்திலிருந்து அல்லாத தேவனுடைய காரியங்களை அறிவது மனிதருக்கு இயலாதது என்று பவுல் குறிப்பிடுகிறார். "மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப் போல, தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான்" (1.கொரி.2;11). எந்த மனிதனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான். மனிதன் நீதியை நிர்ணயிக்க முடியாது.

### பரிசுத்தத்திற்கான ஒரே அளவீடு

பரிசுத்தத்தை ஒப்பிடும் ஒரே ஒரு அளவீடு தேவன் தான். தேவன் மனுஷனை தமது ரூபத்தில் சிருஷ்டித்தார் (ஆதி.1;27), ஆகிலும் மனுஷன்

## கொர்பான் காணிக்கை

ஒருவன் தன் தகப்பன் தாயைவிட்டு வெளியூர் சென்று பணிபுரிந்தால் தன் பெற்றோருக்கு செலுத்தவேண்டியதை அவன் இருக்கும் இடத்தின் தேவலாயத்தில் காணிக்கை செலுத்துவதே கொர்பான் ஆகும்.

மாற்கு 7:11

வீழ்ச்சியடைந்தபோது, தேவன் கிறிஸ்துவத்தை நிலைநாட்டி அதன் மூலம் மீண்டும் அவரது சாயலை அடைய் மறுரூபமாகச் செய்தார். நாம் கர்த்தருடைய மகிமையைக் காண, "... கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே ... மகிமையடைந்து மறுரூபப் படுகிறாம் ..." (2. கொரி.3;18) தேவன் நாம் அவரைப் போல் இருக்கும்படி விரும்புகிறார். நாம் அவருடைய தன்மையில் பங்கடையக் கூடியவராக இருக்கிறோம். அவரே நமது பரிசுத்தத்திற்கான அளவுகோல்.

## எது பரிசுத்தமல்ல?

கலாத்தியர் 5;19-21-ல் பட்டியலிடப்பட்டுள்ள அநேக அவபக்திக்குரிய செயல்கள் மனிதர்களை ஆண்டாண்டு காலங்களுக்கு முன்னே அழித்தது இன்றும் அழித்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட செயல்கள் எந்த அளவுக்கு ஆபத்தானவைகள் என்பதை பின்வரும் பட்டியலிட்ட இறுதி வார்த்தைகள் காட்டுகின்றன. இப்படிப் பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று ... உங்களுக்குச் சொல்லுகிறேன்" (கலா:5;21). கிறிஸ்துவின்சபையார் இவைகளை வெறுத்து ஒதுக்க வேண்டும், ஏனெனில் இவைகளைச் செய்யும் குற்றங்களுக்காக பரலோகத்தின் கதவுகள் இவர்களுக்கு அடைக்கப்படும். நாம் எவைகளை வெறுத்து ஒதுக்க வேண்டும் என பரலோகத்தின் பரிசுத்த தேவன் சரியான வார்த்தைகளை கூறியிருக்கிறார்.

பாலுணர்வு சம்பந்தப்பட்ட பாவப்பட்டியல்: விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம் காமவிகாரம், ஒரு ஆண் பெண் இருவரில் ஒருவராகிலும் திருமணமானவராயிருந்து, வேறுபட் இருவருக்குமிடையே நிகழும் முறையற்ற உறவே விபச்சாரம். வேசித்தனம் என்பது அனைத்துவித காம உணர்வு நிகழ்ச்சிகளைக் குறிப்பது பாலுணர்வு சம்பந்தப்பட்ட எவ்வகைப் பாவங்களையும் திருமறைக் கூறும் வார்த்தை இது. அசுத்தம் என்பது செயலாலும் நினைவாலும் ஒழுக்கமற்ற காரியத்திற்கு இட்டுச் செல்ல செய்கிற அசுத்தத்தை குறிக்கிறது. காமவிகாரம் என்பது சொல், செயல், உடையணியும் முறை ஆகியவற்றில், தனது காம உணர்வுகளை வெளிப்படுத்தி, அவைகளிலிருந்து விலகாமல் இருப்பது. இவ்விஷயத்தில் தேவன் ஒழுங்குபடுத்தியுள்ள முறையை விடுத்து, அந்த ஒழுங்கு முறையை புரட்டி, தங்களுடைய சொந்த எண்ணங்களின் அளவீட்டைக் கொண்டிருப்பது எவ்வளவு துரதிஷ்டவசமானது.

விக்கிரக ஆராதனையும், பில்லி சூனியங்களும் ஆகிய பாவங்கள் : விக்கிரக ஆராதனை என்பது கைகளினால் உண்டாக்கப்பட்ட கற்பனைச் சிலையை வணங்கிச் சேவிப்பது (சங்.115;3-7) அல்லது ஏதாவது ஒரு உலகப் பொருள் மீது பற்றுதலையும், இச்சைகளை (ஆசைகளை) கொண்டிருப்பது (கொலோ. 3;5) பில்லி சூனியங்கள் என்பது, மாந்திரீகம், மூடநம்பிக்கை, மறைவியல் (அமானுஷ்ய சம்பவங்களில்) நம்பிக்கை,

ஜாதகம் கணித்தல் போன்றவற்றைக் குறிப்பது. அப்படிப்பட்டவைகளை செய்வதன் மூலம் தேவனே இவ்வுலகத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார் என்பதை மறுதலிக்கின்றனர், தேவன் தான் நமது ஜீவியத்தில் நடப்பவைகளைத் தீர்மானிக்கிறவர் என்பதையும் மறுதலிக்கின்றனர் (தானியேல் 4;17).

நடத்தை சம்பந்தப்பட்ட பாவங்கள் - பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், அன்புக்கு முரணான செயல் பகை, அது ஆவியில் உண்டாகும் கசப்பையும், மற்றவர்களை எதிரியாகப் பார்ப்பதை உணர்த்துகிறது. விரோதம்; என்பது, பகைமையின் விளைவால் உண்டாகும் சண்டை, வைராக்கியங்கள் என்பது பொறாமையையும், அடுத்தவர்கள் பெற்றிருப்பவைகளைத் தான் பெறவேண்டும் என அடக்க முடியாத ஆசையையும் குறிப்பது. கோபம் என்பது வன்முறைக்கு வழி வகுக்கும் தன்மை. பொறாமை உள்ளுக்குள்ளாகவே எரிச்சலுடன் புழுங்குதல், கோபம் என்பது அந்த எண்ணத்தை வெளியிலே கொட்டுவது.

கள்ள உபதேசங்களுக்கும், பிரிவினைக்கும் உரிய பாவங்கள் - சண்டைகள் பிரிவினைகள், மார்க்க பேதங்கள்; சண்டைகள் பெரும்பாலும் மனவெறுப்பைக் கொண்டு வரும், பிறகு அதுவே கோஷ்டிகளாக பிரிந்து பூசல்களைப் பிறப்பிக்கும். பிரிவினைகள் என்பதன் நேரடிப் பொருள் "பிரிந்து நிற்குதல்" என்பதாகும், அதாவது சுயநல குழுக்களாக ஏற்படும் பிரிவினைகள் எனப் பொருள். மார்க்க பேதங்கள் என்பது ஒருவருடைய சொந்தக் கருத்துக்கள் பிரிவினைகளை ஏற்படுத்த தூண்டுகோளாய் அமைவது என்று பொருள்.

மதுபான வெறிகளையும், களியாட்டுகளையும் கொண்ட பாவங்கள். மதுபான வெறி என்பது அநேகரை போதைக்கு அடிமையாக்கி, அதிகமான குடியில் எப்பொழுதும் இருப்பது எனப் பொருள்படும். களியாட்டுக்கள் என்பது அனைத்துத் தரப்பு சமுதாயத்திலும் மதுபானத்தை குடித்து கும்மாளமிடுவதைக் குறிக்கிறது.

வேறுவகைப் பாவங்களும் திருமறையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன (ரோமர்.1;26-32 கொலோசியர் 3;5-10), எனவே தேவன் தமது மக்களை பரிசுத்தமானவர்களாகக் காண இந்தப் பட்டியலிடப்பட்ட பாவங்கள் துணை புரியும். இதன் மூலம் அவரது பரிசுத்தத் தன்மையே அளவுகோளாகக் கொண்டு அவர்கள் நீதியுள்ள வாழ்க்கை வாழ உதவும்.

### பரிசுத்தத்திற்கான முன் உதாரணங்கள்

கலாத்தியர் நிருபத்தில் (மேலே) கூறப்பட்ட அதே வசனப் பகுதியைத் தொடர்ந்து, பரிசுத்தத்திற்கு உட்பட்ட தன்மைகள் என்னென்ன என பரிசுத்த ஆவியானவர் பட்டியலிட்டுக் காட்டுகிறார். "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், இப்படிப்பட்டவைகளுக்கு

விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை" (கலா.5;22-23). இவைகள் நம்முடைய தேவனின் குணாதிசயமானதால், நாமும் இப்படிப்பட்ட குணாதிசயங்களைக் கொண்டிருக்க வேண்டும் என அவர் எதிர்பார்க்கிறார். இவைகளில் ஒவ்வொரு வார்த்தைகளையும் தனித்தனியாக எடுத்து பழைய ஏற்பாட்டை வாசித்து ஒப்பிட்டுப் பார்ப்பீர்களானால் அனைத்தும் தேவனுடைய குணாதிசயமாகக் காணலாம். மேற் குறிப்பிட்டவைகளில் ஒவ்வொரு வார்த்தையையும் தனித்தனியாக எடுத்துக் கொண்டு புதிய ஏற்பாட்டைப் படித்து பாருங்கள், அவைகள் ஒவ்வொன்றும் இயேசுவினிடத்தில் இருப்பதைக் காண்பீர்கள். பரிசுத்தத்திற்கான தேவனுடைய அளவீட்டைக் கொண்ட இப்பூமியிலே வாழ்ந்த இரட்சகரில் எவ்விதக் குறையும் இல்லாத பரிசுத்தத் தன்மையை நாம் காண முடியும். நாம் எங்கு வாழ்கிறோம், எப்படி வாழ்கிறோம் என்றில்லாமல், எல்லாவற்றிலும் நம்மைப் போலவே அவர் சோதிக்கப்பட்டதன் மூலம் நமது பரிசுத்த வாழ்க்கைக்கு முன் உதாரணமாக அவரையே காண்கிறோம். அவரது இப்படிப்பட்ட பரிசுத்த வாழ்க்கையைக் குறித்து பேதுரு, "கிறிஸ்துவும் உங்களுக்காக பாடு பட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும் . . . தம்மை ஒப்புக் கொடுத்தார்" என்று சொன்னார் (1.பேதுரு2;21-23). கிறிஸ்துவே நம்முடைய முன்மாதிரி இதுவே பரிசுத்தத்திற்கு தேவனின் அளவீடு! எனவே நாமும் அவரைப் போல் இருக்க வேண்டுமே!

## சபையும் பரிசுத்தமும்

இன்று அநேகர் தேவனுடைய பரிசுத்தத்திற்கான பார்வையை இழந்து விட்டனர். அதன் விளைவாக பாவம் நிறைந்த ஒரு உலகத்தைக் காண்கிறோம். தங்களை பக்திமான்கள் என கூறிக்கொள்ளும் சிலர், பாவங்களை மன்னித்து விடுவதாக கூறிக் கொள்ளலாம்; ஆனால் உண்மையான சபை இப்படிப்பட்ட தன்மை உடையதல்ல. சபை கர்த்தருக்கு ஊழியஞ்செய்து, அவருடைய வழியை தேடி அவருடைய போதனைககளை ஒழுக்க ரீதியான காரியங்களுக்கு செவி சாய்த்து சபை வாழ்கிறது. இவைகளை அவள் (சபை) செய்யாமல் விடும்போது, அவளை (சபையை) அவர் புறக்கணிக்கிறார் (வெளி.2;5). அவள் பிரயோஜனமற்ற, சாரமற்ற உப்பாக அவரது கரத்தில் மாறுகிறாள் (மத்.5;13). இந்த சமுதாயம் ஒரு புதிய நடைமுறை வாழ்கையை கொண்ட சமுதாயமாக மாறும் போது, ஒரு புதிய ஒழுக்க காரியங்களைத் தேடும்போது, கிறிஸ்துவின் சபை பரிசுத்தமான வாழ்க்கைக்குரிய அளவீட்டை கை கொள்ளும்.

தமிழில் : **E.A. ஆறுமுகம்.**

# விசுவாசத்தின் அடிப்படைகள்

எ) நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றும்படி வந்தார்

1. மத் 5:17

2. லூக்கா 24: 5,27: 44-48

ஏ) இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்தை எடுத்து அவருடைய சிலுவையின்மேல் ஆணியடித்தார் (கொலோசேயர் 2:11-16)

ஐ) இயேசு கிறிஸ்துவினுடைய புதிய ஏற்பாடு அவருடைய மரணத்திற்குபின் அமலுக்கு வந்தது என்ற பழமையோடு இது ஒத்திருக்கிறது. அந்தப்படி பழையது மாற்றப்பட்டது (எபிரேயர் 9:15-17)

ஒ) அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 6:15ல் கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டின் படி இல்லை. 7-4 கிறிஸ்தவர்கள் பழைய பிரமாணத்துக்கு மரித்திருக்கின்றார்கள். 7:6 பழைய சட்டத்தினின்று கிறிஸ்தவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஓ) முதலாவது பிரமாணம் (பழைய ஏற்பாடு) இரண்டாவதான புதிய பிரமாணத்தால் மாற்றப்படும்படி முதலாவது ஏற்பாட்டை கிறிஸ்து மாற்றினார். எபிரேயர் 10:9-10

ஔ) கிறிஸ்து முதல் நூற்றாண்டு, கிறிஸ்தவர்களை, சாபத்தினின்று

## எகிப்திலிருந்து கானானை நோக்கி புறப்பட்ட 12 கோத்திரங்களைச் சேர்ந்த ஆண்மக்களின் தொகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ரூபன் | 46,500 | 7. | மனாசே | 32,200 |
| 2. | சிமியோன் | 59,300 | 8. | பென்யமீன் | 35,400 |
| 3. | யூதா | 74,600 | 9. | தாண் | 62,700 |
| 4. | இசக்கார் | 54,400 | 10. | நப்தலி | 53,400 |
| 5. | செபுலோன் | 57,400 | 11. | காத் | 45,650 |
| 6. | எப்ராயீம் | 40,500 | 12 | ஆசேர் | 41,500 |
| | | | | மொத்தம் | **6,03,550** |

மீட்டார். (கலா 3:13)

ஃ) பழைய ஏற்பாடு ஒரு சட்டமாக நம்மை இன்று கட்டுப்படுத்தாது. அது கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு சட்டத்தால் மாற்றப்பட்டது.

3. புதிய ஏற்பாட்டைப்பற்றி உடன்படிக்கை எப்படி?

அ) எபிரேயர் 7:22 அநேக காரணங்களால் அது மேன்மையான உடன்படிக்கை.

ஆ) எபி. 9:15 இயேசுவே அதற்கு மத்தியஸ்தர்.

இ) எபிரேயர் 8:6 இது மேலான வாக்குத்தத்தங்களின் மீது அமைக்கப்பட்டுள்ளது.

2. எபிரேயர் 7:19 இது மேலான நம்பிக்கையைக் கொடுக்கிறது.

3. எபிரேயர் 10:10 இதில் மேலான தியாகம் இருக்கிறது.

## யோவானில் இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களும் அவை தரும் செய்திகளும்

1 **தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றுகிறார். (யோவான்.2:6-10)**

பழைய ஏற்பாடாகிய பழைய ரசத்தை புதிய ஏற்பாடாகிய புதிய ரசமாக மாற்றுகிறார்

2 **ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரனை மரணத்திற்கு ஏதுவான வியாதியிலிருந்து உயிர்ப்பித்துள்ளார். (யோவான். 4:46-50)**

பாவ மரணத்திலிருந்து நம்மை உயிர்ப்பிக்கிறார்

3 **38 வருடம் வியாதியாயிருந்த மனுஷனை குணமாக்கினார். (யோவான்.5;5-9)**

இரக்கமில்லாதவர்களுக்கு இரக்கத்தை தருகிறவராயிருக்கிறார்.

4 **5 அப்பமும், 2 மீன்துண்டுகளை வைத்தும் 5,000ம் பேரை போஷித்தார் (யோவான்.6,9-10).**

ஒரே ஜீவ அப்பமாக இருந்து அநேகரை சத்தியத்தால் போஷிக்கிறார்.

5 **கடலின் மீது நடந்தார் (யோ.6;16-19)**

தேவன் இயற்கை மீது அதிகாரமுடையவராய் இருக்கிறார்.

6 **பிறவிக் குருடனை குணப்படுத்துகிறார் (யோவான்.9;6,7)**

இன்று ஆவிக்குரிய குருடர்களை இயேசு குணப்படுத்துகிறார்.

7 **லாசருவை உயிரோடே எழுப்பினார் (யோ.11;34-43)**

நாமும் இரண்டாம் வருகையின் போது இயேசுவால் உயிரோடே எழுப்பப்படுவோம்.

இயேசுவின் சரீரமும் இரத்தமும் எல்லாருடைய

பாவங்களுக்காகவும் தியாகம் செய்யப்பட்டுள்ளது.

ஈ) எபிரேயர் 13:20 இது நித்திய உடன்படிக்கை

1. எபிரேயர் 10:29 இது இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தோடு தொடர்புடையது.

2. மத்தேயு 26:28 பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக

சிந்தப்பட்ட புதிய ஏற்பாட்டின் இரத்தம்.

4. அப்படியானால் பழைய ஏற்பாடு இன்று நமக்கு பிரயோஜனமற்றது என்று அர்த்தமாகுமா? பின்வரும் காரணங்களுக்காக அது மதிப்புள்ளது.

அ) ரோமர் 15:4 - போதனைக்கு

ஆ) 1 கொரிந்தியர் 10:6,11 - திருஷ்டாந்தமாக

இ) இது நம்மை ஒரு சட்டமாக பிணைக்கவில்லை. நாம் இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டின் கீழ் இருக்கிறோம்.

5. நாம் ஏன் தேவனுடைய வார்த்தைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம்

அ) இந்த தன்மைகளை சிந்தித்து பாருங்கள்

1. நாம் தொடர்ந்து இதை படித்து, அதன்படி ஜீவித்தால் நம்மை ஆவிக்குரிய வகையில் விடுதலை செய்யும் (யோவான் 8:31,32)

2. இது விசுவாசத்தை உண்டாக்கும் (ரோமர் 10:17) யோவான் 20:30, 31)

3. நம்மையும் ஆசீர்வாதமுமான வாழ்க்கையை நமக்கு காண்பிக்கிறது. உபாகமம் (30: 15,19)

4. கர்த்தருக்கென்று நாம் கனி கொடுக்கத்தக்கதாக நம்மில் கிரியை செய்கிறது; (1 தெசலோனிக்கேயர் 2:13 கலாத்தியர் 5:22, 23)

5. நமக்குத்தேவையான எல்லாவற்றையும் தன்னுள்

கொண்டிருக்கிறது (2 பேதுரு 1:3,4)

6. இரட்சிக்கப்படத்தக்க ஞானவான்களாக நம்மை அது மாற்ற முடியும் (2 திமோத்தேயு 3:15)

அவைகள் உபதேசத்துக்கும் கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.2 தீமோத்தேயு 3: 16

**G. தானியேல்** **Charlie Di Palma**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box 80<br>Kakinada - 533 001 | Joshua Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box 8405<br>Bangalore - 560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum - 695 034 | P.K. Varghese |



**FOR FREE DISTRIBUTION ONLY**

***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2002
Licensed to Post without Prepayment
TN / WR / ERD / 03 / WPP / 2002

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்

கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட,

அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள்

விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவசப் பயிற்சி,**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு

சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**

த.பெ.எண்-27, காங்கேயம் - 638 701.

தமிழ்நாடு. இந்தியா

Published by **Church of Christ, Kangayam,**

Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S. Rajanayagam.**